2017 மார்ச் 07
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 07 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 038

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
நவமணி தினபதி

நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

தகவல் சட்டம் சிலருக்கு அஜீரணமாக அமையலாம் கவனம் 04

படை பரிவாரங்களுடன் பாலித் தீவில் 'கிங்' சல்மான் 09

ஜயசூரியவின் சகலதுறை ஆட்டம் தொடரை வென்றது இலங்கை

தம்புள்ளை 'வன்முறைகளை' தடுக்காதது ஏன்?

பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரும் பொலிஸ் ஆணைக்குழு

கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் தொடராக தம்புள்ளையில் முஸ்லிம்களுக்குரிய வர்த்தக நிலையங்களை மூட வைத்து முஸ்லிம்களுக்கெதிராக வன்செயல்களைத் தூண்டிவிட்ட சம்பவம் இடம்பெறுவதனை தவிர்க்க நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் காட்டுமாறு தேசிய பொலிஸ் ஆணைக் குழு பொலிஸ் அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் விளக்கம் கோரியுள்ளது.

ஒருவார காலத்துக்குள் இது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் என். ஆரியதா குரே பொலிஸ் மா அதிபரை கேட்டுள்ளார். இது தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 69 ஆவது கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையிலான மோதல் ஏற்படுவதனை தவிர்க்க தம்புள்ளை பொலிஸ் நடவடிக்கை எடுக்கவில்லை எனக்குறிப்பிட்டே இந்த விளக்கம் கோரப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள இக் கடிதத்தின் பிரதி பொலிஸ் ஆணைக்குழு அங்கத்தவர் வை.எம்.எம். சவாஹிருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

11 >>>>>

இலங்கையர்கள் குவைத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

கபீர்ஹாசிம் அரசுக்கு அறிக்கை

குவைத்தில் பணிபுரியும் இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரச தொழில் முயற்சிகள் அமைச்சர் கபீர் ஹாசிம் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

அண்மையில் குவைத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு இலங்கையர்களைச் சந்தித்தபோது இலங்கையர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

11 >>>>>

ஜனாதிபதி மைத்திரிக்கு ஜகார்த்தாவில் வரவேற்பு

இந்து சமுத்திர பிராந்தியத்தின் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தோனேஷியாவிற்கு பயணமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று (06) பகல் ஜகார்த்தாவில் உள்ள Soekarno Hatta சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

11 >>>>>

அதிவேக நெடுஞ்சாலைகள் இரண்டின் பணிகள் நிறுத்தம்

■ அ. அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அதிக கடன் சுமைக் காரணத்தினால் அதிவேக நெடுஞ்சாலைகள் இரண்டினை அமைக்கும் பணியை அரசு கைவிட்டுள்ளது.

கடன் பெற்றுக்கொள்வதைக் குறைத்துக்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாகவே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

11 >>>>>

இலங்கைப் பணிப் பெண்ணுக்கு 16 இலட்சம் ரூபா வழங்கு

குவைத் நீதிமன்றம் உத்தரவு

நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக பணிபுரிந்து வந்த இலங்கை பெண்ணிற்கு, சம்பளம் கொடுக்காமல் வந்த அவரின் எஜமானியை 1.6 மில்லியன் ரூபா கொடுக்கும்படி அத்நாட்டு சட்டத்துறை உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவந்துள்ளதாவது, இலங்கையை சேர்ந்த பணி பெண் ஒருவர், சுமார் நான்கு வருடங்கள்

11 >>>>>

அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்

இன்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

■ அ. அருண் பிரசாந்த்

2007 ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் இலங்கை அரசினால் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு தொடர்பிலான ஒப்பந்தம் மீளவும் புதுப்பிக்கப்படும் என்று அரசின் நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து தெரியவந்துள்ளது.

யுத்தகாலத்தின்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவினால் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட

11 >>>>>

கொழும்பு குப்பைகளுக்கு கொலன்னாவையில் எதிர்ப்பு

பைசர் முஸ்தபாவுடன் இன்று பேச்சு

■ அ. அருண் பிரசாந்த்

கொலன்னாவை, மீத்தொட்டமுல்லை பகுதியுள்ள குப்பைகளை அகற்றுவது தொடர்பில் இன்று காலை 10 மணிக்கு மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் பேச்சு நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான

11 >>>>>

விசாரணை எதுவும் நடத்தாது அத்வானியை விடுவிக்க முடியாது

இந்திய உயர் நீதி மன்றம்

■ திருச்சி சாஹுல் ஹமீது

விசாரணை நடத்தாமலேயே, பாபர் மசூதி வழக்கிலிருந்து அத்வானியை விடுவிக்க முடியாது என்று இந்திய உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில், சதித் திட்டம் தீட்டியதாக பா.ஜ.க. மூத்த தலைவர்களான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி மற்றும் கல்யாண் சிங்

11 >>>>>

ஹம்பாந்தோட்டை துறைமுக குத்தகையால் இலங்கைக்கு 1436 பில்லியன் நஷ்டம்

கம்மன்பில அதிர்சித் தகவல்

■ அ. அருண் பிரசாந்த்

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுப்பதன் ஊடாக இலங்கைக்கு 1436 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படவுள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயக் கட்சித் தலைவரும் மஹிந்த ஆதரவு ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினருமான உதயகம்மன்பில நேற்று அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டார்.

எனினும், இவ்வாறு நஷ்டம் ஏற்படவுள்ளதை அறிந்திருந்தும் இந்த

11 >>>>>

வடமேல் மாகாண சபையில் இன்று நம்பிக்கையில்லா பிரேரணை

தீர்மானிக்கும் சக்தியாக மு.கா.

■ இக்பால் அலி

வடமேல் மாகாண ஆளுநர் அமர பியசிலி ரத்நாயகவுக்கு எதிராக

11 >>>>>

கிண்ணியாவில் டெங்கு நோய் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது

பிரதியமைச்சர் பைஸல் காசிம்

கிண்ணியாவில் டெங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சுகாதார பிரதியமைச்சர் பைஸல் காசிம் தெரிவித்தார்.

கிண்ணியாவுக்கு நேரில் விஜயம் செய்திருந்த பிரதியமைச்சரிடம் நிலைமைகள் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் நாளொன்றிற்கு 8 பேராளவில் டெங்கு தொற்றுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வந்ததாகவும், இந்நிலை இப்போது இரண்டாக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுகாதார சேவையின் பணிப்பாளர் டாக்டர் அமுனுகம மற்றும் மேலதிக வைத்தியர்கள் கிண்ணியாவில் தங்கி சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச வைத்தியசாலைகளுக்கு போதியளவு சோதனை இயந்திரங்களும், சுகாதார சேவைக்கு பொக் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

டெங்கு பரவல் கட்டுப்பாட்டை அடைந்துள்ளது. டெங்குத் தொற்றை கட்டுக்குள் கொண்டுவர பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது- என்றார்.

ஆற்றில் மூழ்கி இளைஞன் மரணம்

(க.கிஷாந்தன்)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா கிளாசோ ஆற்றில் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் நானுஓயா கிளாசோ பிரதேசத்தில் அமைந்துள்ள ஆற்று பகுதியில் தனியாக குளிக்க சென்றுள்ளார். இதன் போது நீராடிக் கொண்டிருக்கும் வேளையில் குறித்த இளைஞன் சுழியொன்றில் அகப்பட்டுள்ளார்.

அகப்பட்ட குறித்த இளைஞன் ஏனையவர்கள் காப்பாற்ற முயற்சித்த போதும் முயற்சி பயனளிக்காத நிலையில் மேற்படி இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா ஒலிபஸ்ட் பகுதியை சேர்ந்த 17 வயதான சரவணகுமார் ஸ்ரீநாத் என்பவரே உயிரிழந்தவராவார் என அடையாளம் காணப்பட்டுள்ளது. உயிரிழந்த இளைஞன் நானுஓயா கிளாசோ தோட்டத்தில் உள்ள தனது உறவினர் வீட்டில் வசித்து வந்ததாக தெரியவந்துள்ளது.

காட்டுயானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துமாறுகோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(கல்முனை பி. முஹாஜிரீன், எம்.ஏ.றமீஸ்)

ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதேச எல்லைக் கிராமங்களில் அண்மைக் காலமாக அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துமாறு கோரி கடந்த ஞாயிற்றுக்கிழமை அஷ்ரப் நகர் கிராமத்தில் பொது மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லாட்சி அரசே யானைகளின் தொல்லைகளிலிருந்து எமது கிராமத்தை பாதுகாத்திடு, யானைத் தாக்கத்திலிருந்து எங்களை காப்பாற்று போன்ற சுலோகங்களை ஏந்தியவண்ணம் பொது மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒலுவில் அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர் ஆகிய பிரதேசங்களிலேயே யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் அங்கு வாழும் மக்கள் பெரும் அச்சத்துடன் இரவு வேளையில் வாழ்ந்து வருவதாகவும், இதனால் பொருளாதார ரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் தெரிவித்தனர். பிதியின் காரணமாக மக்கள் மாலை நேரங்களில் தங்களை குடியிருப்பை விட்டு வெளியேறி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூட்டிக் காட்டினர். இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம் வீட்டுத் தோட்டங்களை சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். யானைத் தொல்லையை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மின்சார வேலியை அமைத்துத் தருமாறு கோரியே இக்கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்ததாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர் கலாநிதி வை.எல். நிஸார் ஹைதர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத்தின் டெங்கு ஒழிப்பு திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை கருத்திற்கொண்டு ஜமாத்தின் திருகோணமலை மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள சுத்திகரிப்பு பணியும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கிளை நிர்வாகிகளும் தொண்டர்களும் இணைந்து பணிகளில் ஈடுபடுவதை காணலாம். திருகோணமலை மாவட்டத்தில் 1000 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் அதனை அவதான மாவட்டம் என்று அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி பாடசாலை அதிபர் எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது பாடசாலை அதிபர் எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்று ஒரு வருடப்பூர்த்தியையும் முன்னிட்டு இதுவரை காலமும் ஆற்றப்பட்ட சேவைகள் பற்றிய விபரங்கள், கடந்த வருட வரவு செலவுத்திட்ட அறிக்கை, அதிபரின் எதிர்காலத்திட்டங்கள், புதிய அபிவிருத்தி சங்க உறுப்பினர் தெரிவு, பாடசாலைக்கு உதவியோரின் பெயர் விபரங்கள் என்பனவும் முக்கிய விடயங்களாக கலந்துரையாடப்பட்டன.

அந்த வகையில் புதிய அபிவிருத்தி சங்கத்தலைவராக பாடசாலை அதிபர் எஸ்.எ. இஸ்மத் பாத்திமா, ஆசிரியர் குழாம் சார்பாக பிரதி அதிபர் எம்.ஆர். எப் பஷ்மிதா, உதவி அதிபர் எப். ரில்னா இக்ரம், பகுதித்தலைவிகளான எம்.எல்.எப். பரீனா, எம்.ஜே.எப். ரஸானா மற்றும் ஆசிரியை எம்.எஸ்.ஐ. அவீரா அபிவிருத்திச்சங்க செயலாளராக ஏ.ஏ.எம். ஷிராஸ் மற்றும் அங்கத்தவர்களாக பெற்றோர்கள் சார்பாக எம்.எஸ். எம். சுலைமான், எம்.எஸ்.எம். அஸ்மி, எம்.எச்.எம். ரம்ஸான்,பழைய மாணவிகள் சார்பாக எம்.என்.எப். ரஹ்மான், எம்.ஐ.எப். ரில்னா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு புதிய அபிவிருத்தி சங்கக் குழு நியமிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பெற்றோர்கள், பழைய மாணவிகள்,ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஒட்டமாவடி பாலிகா வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்

(வாழைச்சேனை நிருபர்)

தேர்தல்கள் திணைக்களமும் கல்வி யமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் மாணவர் பாராளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதனடிப்படையில் ஒட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்றம் தேர்தல் நேற்று பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தரம் 06 முதல் தரம் 13 வரையுள்ள மாணவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு மாணவர் பாராளுமன்றம் தாபிக்கப்படும் இதில் தரம் 06 முதல் தரம் 09 வரை 30 மாணவர்களும், தரம் 10 முதல் 13 வரை 65 மாணவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். தேசிய ரீதியில் பெண்களின் அரசியல் பிரதி நிதித்துவத்தினை அதிகரிக்கும் நோக்கில் இந்த மாணவ பாராளுமன்றச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது மாணவர் பாராளுமன்றத்தில் சபாநாயகர், பிரதமர், சபை முதல்வர், பிரதி சபாநாயகர், பிரதி செயற்குழுத் தலைவர், பத்து அமைச்சர்கள், பத்து பிரதி அமைச்சர்கள், பத்து ஆலோசனைச் செயற் குழுக்கள் அமைய வுள்ளன.

ஒட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலத்தில் இடம் பெற்ற மாணவ பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.றில்மியா பானு, மட்டக்களப்பு மத்தி கல்வி வலய ஆசிரிய ஆலோசகரும், மாணவர் பாராளுமன்ற இணைப்பாளருமான எம்.ஏ.சலாம், வித்தியாலய முன்னாள் அதிபர் ஏ.எல். நைனா முஹம்மட், வித்தியாலய அதிபர் எம்.ஏ.ஸாபிர், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை அந்நூரில் பெற்றோர்,மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(அட்டாளைச்சேனை றியாஸ் ஆதம்)

அட்டாளைச்சேனை அந்- நூர் மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதைக் கண்டித்தும், மீண்டும் அவ் அபிவிருத்தி திட்டத்தை அந்-நூர் மகா வித்தியாலத்தில் அமுல்படுத்துமாறு கோரியும் நேற்றைய தினம் பெற்றோர்களும், பழைய மாணவர்களும் பாடசாலைக்கு முன்னாள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பழைய மாணவர்களும், பெற்றோர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் பிரதேச வாதம் காட்டாதே நீதி வேண்டும் அநீதி இழைக்காதே அரசியல்வாதிகளே நியாயம் வழங்கும் போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு அப்பாடசாலையில் சில அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் திடீர் என அவைகள் யாவும் இடை நிறுத்தப்பட்டு இத்திட்டம் வேறு பாடசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள இப் பாடசாலை கல்வி நிலையில் முன்னேறிக் கொண்டு வருகின்ற வேளையில் வளப்பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இதனைக் கருத்திக் கொண்டு அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்த நிலையில் இவை திடீர் என இரத்துச் செய்யப்பட்டுள்ளமை இப் பிரதேச மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை கண்டித்துடன் இத்திட்டத்தினை இப் பாடசாலையில் அமுல்படுத்துமாறு கோரியுமே இக் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட ஏனைய பாடசாலைகளில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படும் போதிலும் இவ்வித்தியாலயத்தில் மாத்திரம் எந்தவித அபிவிருத்தி வேலையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். இது தொடர்பில் அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தமீம் ஆப்தீன் தெரிவித்த போது, இவ்வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் நிக்கப்பட்டு அரசியல்வாதிகள் சிலரின் ஒத்துழைப்புடன் வேறு பாடசாலைக்கு இத்திட்டத்தை வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக அறியக் கிடைத்துள்ளது என்றார்.

மஹிந்த முஸ்லிம்கள் இன்று சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம்கள் சந்திப்பு இன்று (07) மாலை 5 மணிக்கு கொழும்பு-07 விஜேராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் தமிழர்களுக்கான கூட்டம் ஒன்றையும் நடத்த திட்டமிட்டுள்ளார்.

நேற்று (06) பத்திரிகையின் முதல் பக்கத்தில் முஸ்லிம்களுடன் மஹிந்த இன்று(6) சந்திப்பு என்று வெளியாகியிருந்த செய்தியில் 7ஆம் திகதிக்கு பதிலாக 6ஆம் திகதி என்று குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு வருந்துகிறோம்.

நீத்தார் பெருமை

எழுத்தாளரும் சமூக சேவையாளருமான அபு அனஸ்

கிழக்கு மாகாண தலைநகரமான திருகோணமலை மாவட்ட திருகோணமலை தேர்தல் தொகுதியில் சோனக வாடி கிராம சேவையாளர் பிரிவை பிறப்பிடமாகக் கொண்ட அபுபக்கர் முகம்மது அனஸ் 1959ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பிறந்தார்.

திருகோணமலை சாஹிறா மகா வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியைக் கற்ற இவர் புனித சூசையப்பர் கல்லூரியில் கலைப்பிரிவில் உயர்தரத்தைக் கற்றார். இரு பாடசாலைகளுக்கும் பழைய மாணவரான இவர் பழைய மாணவர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பல அபிவிருத்திப் பணிகளில் பங்காளியாக இருந்துள்ளார். பாடசாலைக் காலத்திலிருந்தே நல்ல பேச்சாளரக கவிதை எழுதுபவராக தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர் அனஸ். 1988ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண சபையில் நட்டெழுத்து உதவியாளராக நியமனம் பெற்று மாகாணசபை கலைக்கப்பட்டதன் பின் கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் எழுதுவினைஞராக பதவி உயர்வு பெற்றுச் சென்றார். பல அரசியல் விமர்சனங்களையும் அரசியல் கட்டுரைகளையும், பல பத்திரிகைகளில் எழுதி பல்லாயிரக்கணக்கான உள்ளங்களில் தன்னை இருக்கச்செய்தவர். இவரின் எழுத்துத் துறையைப் பாராட்டி பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் சாஹித்திய விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். எழுத்துத்துறையுடன் மட்டும் நின்றுவிடாமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து அதன் ஸ்தாபகத் தலைவர் அமைச்சர் மர்கூம் எம்.எச். எம்.அஸ்ரப் அவர்களுடன் இணைந்து கட்சியின் ஆரம்பப் பணிகளை சிறப்பாகச் செய்ததால் இவர் மீது கொண்ட அபிமானத்தின் காரணமாக தலைவர் மரணிக்கும் வரை திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைப் பரப்புச் செயலாளரக நியமித்திருந்தார். இப்பதவியினை பயன்படுத்திய இவர் பலருக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையில் தேவலைவாய்ப்புக்களையும் அமைச்சரை சந்தித்து தங்களுடைய இடமாற்றம் போன்ற தேவைகளை முடிக்க இயலாமை இருந்தவர்களுக்கு தலைவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

திருகோணமலை ஜனாசா நலன்புரி சங்கத்தின் தலைவராகவும் மரணிக்கும் வரை திருகோணமலை நகரின் பெரிய பள்ளியான முகைதீன் ஜும்மா மஸ்ஜித்தின் தலைவராகவும் இருந்த இவர் சித்தி பரீனா ஆசிரியையை மணமுடித்து பாத்திமா சகுலுன், சிஃப்புல் குதா, முகமட் இஸ்மத், முகமட் சஃஜாத் ஆகிய நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாகவும் மர்ஹூம் அபுக்கர், மரியம் பீபி ஆகியோருக்கு புதல்வனாகவும் இருந்து தனது 49ஆவது வயதில் கடந்த 28.10.2008 அன்று காலமானார். அன்னாருக்கு இன்னலும் பிரதௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

(திருமலை நிருபர், காசிம் அஸ்வர்)

மொனராகல நீர் வழங்கல் திட்டம், பதுளை பிரதி பொது முகாமையாளர் அலுவலகம் திறப்பு மற்றும் வெலிமட குறுத்தலாவ, கலாவ, லுணுகல நகரத்திற்கான நீர்வழங்கல் திட்டம் சம்பந்தமான கலந்துரையாடலொன்று நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்ட அமைச்சின் பதில் செயலாளர், மேதிக செயலாளர், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் பதுளை மாவட்ட அமைப்பாளர் பி.தாஜுதீன் ஆகியோரை படத்தில் காணலாம்.

மின்சாரத்தில் சிக்கனம் தேவை

மழை பெய்த போதிலும் மின்னுற்பத்திக்கான நீரேந்து பகுதிகளில் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி இடம்பெறவில்லை என மின்சக்தி அமைச்சு தெரிவித்தது.

ஜனவரி மாதத்திலிருந்து எதிர்வரும் 6 மாத காலப்பகுதிக்கான மின் உற்பத்திக்கு மேலதிகமாக 51 பில்லியன் ரூபா செலவிட வேண்டி ஏற்படுமென்று மின்சார சபை கணக்கிட்டுள்ளது.

மாலை 6.30 - இரவு 10.30 இடைப்பட்ட காலப்பகுதியில் மேலதிக செயற்பாடுகளுக்காக மின்சாரத்தை பயன்படுத்துவதில் சிக்கனத்தைக் கையாளுமாறு மின்சார சபை பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பெண்களுக்கு பலமும், தைரியமும் கிடைக்க வேண்டும்

மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைப் பெண்களுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கப் பெற்றிருந்தாலும், இலங்கைப் பெண்களில் அதிகமானோர் வீட்டு அலுவல்களுடன் சுருங்கிக் காணப்படுகின்றமையால், இலங்கையின் ஊழியப் படையில் பெண்களின் சதவீதத்தினைஅதிகரிக்க நாம் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என சர்வதேச மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இல்லத்தரசியாக, தாயாக, மனைவியாக குடும்பத்தில் தனது பணிகளை ஆற்றுவதுடன், பெண்ணிடம் காணப்படும் உடல்,உள,ஆன்மீகப் பலம் ஊடாக பரிய சமூகப் பணியை ஆற்றும் திறனும் அவளுக்கு காணப்படுகிறது. அதற்குத் தேவையான சுதந்திரம், அங்கிகாரம், தைரியம் மற்றும் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது நமது பொறுப்பாகும். அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துக் காணப்பட்டாலும்,அவளுக்கு சமமானஉரிமைகள்,கண்ணியம்,மதிப்பீடுகிடைக்கின்றதா என்பது குறித்து பொறுப்புடன் சிந்தித்துப் பார்ப்பதுஅவசியமாகும்.

முக்காலத்தையும் அறிந்தவள் - பலத்தினால் வெற்றிகொள்பவள் எனும் இவ்வருட சர்வதேச மகளிர் தின கருப்பொருள் அதற்கான விரிவான நோக்கை வழங்கும் என எதிர்பார்க்கிறேன்.

அனைத்துப் பெண்களுக்கும் பலமும்,தைரியமும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

கைத்தொழில் அமைச்சு, கல்வி அமைச்சு, யுனெஸ்கோ இணைந்து

கைவினை வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம்

கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான தேசிய அருங்கலைப் பேரவையினால் கல்வி அமைச்சு மற்றும் யுனெஸ்கோ ஆகியவற்றுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு கைவினைப் பொருட்களை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று நேற்று காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பேரவையின் தலைவி ஹேஸானி போகொல்லாகம தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் அதிதிகளாக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீன், கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் பங்கேற்றனர்.

கடந்த வருடம் அருங்கலைகள் பேரவை நடைமுறைப்படுத்திய முதல் கட்ட வேலைத்திட்டத்தில் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 40 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்று பயிற்சிகளை பெற்றிருந்தனர். பயிற்சி பெற்றவர்களில் தெரிவுசெய்யப்பட்ட, மிகவும் நேர்த்தியான 800 மாணவர்கள் நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும். வடக்கு கிழக்கு உட்பட 112 நிலையங்களில் 21 வகையான கைவினைப் பொருட்களில் இந்த மாணவர்கள் தமது பயிற்சியைப் பெற்று வருகின்றனர். கல்வியமைச்சின் பாடத்திட்டத்தில் கைவினைப் பொருட்கள் என்ற பாடப்பரப்பும் உள்ளடக்கப் படுவதற்கான முன்மொழிவுகள் உள்ளன. நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் பாயஸ், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஹரித்த இலகரட்ன, லக்சல நிறுவன தலைவர் இஸ்மாயில் உட்பட அதிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

டெங்கு ஒழிப்பு வாரம் 29 இல் ஆரம்பம்

மீண்டும் டெங்கு ஒழிப்பு வாரமொன்று எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படவுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது. இது தொடர்பில் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், இதன் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

உணவு ஒவ்வாமையால்

மாணவர்கள் வைத்தியசாலையில்

மாத்தறை பிரதேசத்திலிருந்து சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்கள் 20 பேர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்களில் 15 மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும், எனினும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு ஒவ்வாமையே இதற்கான காரணமாக இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எதுஎவ்வாறு இருப்பினும், இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விமலுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்சவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவு பிறப்பித்தார்.

நேற்றைய தினம் விமல் வீரவங்ச தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில், விமல் வீரவங்ச கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

மேலும், விமல் வீரவங்ச நீதிவானின் அனுமதியின்றி நீதிமன்றத்தின் உட்சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மருதானை பொலிஸ் அதிகாரி தற்கொலை

விசாரணைகள் தீவிரம்

கொழும்பு மருதானை பொலிஸ் நிலைய பொலிஸ் சமூக நலப்பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் மரண பரிசோதனையும் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர் நீர் கொழும்பைச் சேர்ந்த நிறோஷ் ஜயவீர என்ற 58 வயதுடைய இருபிள்ளையின் தந்தையெனவும் தெரியவந்துள்ளது.

குறித்த பொறுப்பதிகாரியின் ஒய்வறையிலேயே தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதோடு, அவரின் அறைக்கு பக்கத்து அறையில் மற்றுமொரு அதிகாரியின் குளியலறையுள்ளதால், நீண்டநேரம் கதவு மூடப்பட்டு இருந்த நேரம், தட்டி பார்த்துள்ளார். எவ்வித சத்தமும் இல்லாத காரணத்தினால் அறையின் கதவை உடைத்து பார்த்த போதே குறித்த பொறுப்பதிகாரி அறையின் மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

உயிரிழந்த பொறுப்பதிகாரி தொடர்பில் பல குற்றப்பத்திரிகை இருந்தமையால் சில நாட்களாக மிகுந்த மனவருத்தத்துடன் இருந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸ் பிரதான அதிகாரி சரத் பெரேரா தலைமையிலான குழு முன்னெடுத்துள்ளது.

"பயணம்" நூல் வெளியீடு

50 மைல்களைத் தாண்டி பயணித்த பாதையை திரும்பிப் பார்த்தல் பயணம் தர்மியா அமர்வுக்கான இதழ் வெளியீடு ஸலாமா வெளியீட்டுப் பணியகத்தால் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.45 முதல் 8.45 மணிவரை ஸலாமா தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, பயணத்தின் ஆன்மீகப் பங்களிப்பு எனும் தலைப்பில் உரையை பிரபோதய, எங்கள் தேசம் ஆசிரியர் எம்.எச்.எம்.ஹஸன் நிகழ்த்தவுள்ளதோடு, பயணத்தின் சமூகப் பங்களிப்பு எனும் உரையை கல்வி அபிவிருத்தி மையத்தின் ஸ்தாபகர் அஷ்ஷெய்க் றவூப் ஸெய்னும் உரை நிகழ்த்துவார்.

தொழில்நுட்ப முதலீடுகளை மேற்கொள்ள ஹொங்கொங் நிறுவனங்கள் கலந்துரையாடல்

ஹொங்கொங் நாட்டின் பிரபல ஹயார் மற்றும் இன்ஸ்பர் நிறுவனங்கள் இலங்கையில் தொழில் நுட்ப முதலீடுகளை மேற்கொள்வது குறித்து புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுடன் நேற்றையதினம் கலந்துரையாடலில் ஈடுபட்டன.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் ஹயார் நிறுவனத்தின் பணிப்பாளர் பிரான்க் ஹவாங், இன்ஸ்பர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர்களான ஜெஎசீகா சன், பிரான்ங் மீன்ங், மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் ஹிராஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் நிப்ராஸ் மொஹமட் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ரிதிதென்னையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா மற்றும் தொழில்நுட்ப வாசிகசாலை என்பன நிர்மாணிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

சஷி வெல்கமவுக்கு

பிணை

இலங்கை போக்குவரத்து சபையின் நிதிகளை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கம நேற்றையதினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே,கொழும்பு மேல் நீதிமன்றம் இவ்வுத்தரவை பிறப்பித்தது.

இரண்டு இலட்ச ரூபா ரொக்க பிணையிலும், தலா ஐந்து இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுதலை செய்யப்பட்டதோடு, வெல்கமவின் வெளிநாட்டு பயணங்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

கடந்த ஆட்சி காலத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் நிதிகளை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் வெல்கம, கடந்த வருடம் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் 37 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பன்றிக் காய்ச்சல் எனப்படும் எச்1என்1 இன்ப்ளுவன்சா நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்த முதலாவது குழந்தை கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. அன்றிலிருந்து கடந்த மார்ச் 3 ஆம் திகதி வரையான 21 நாட்களில் 244 பேர் குறித்த நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

இவர்களுள் 25 கர்ப்பிணிகளும், 9 சிறுவர்களும் அடங்கலாக 37 பேர் எச்1என்1 இன்ப்ளுவன்சா நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளமை கொழும்பு வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்கள் பொது இடங்களில் ஒரே நேரத்தில் சந்தித்திருப்பது ஆய்வுகளில் தெரியவந்துள்ளதோடு, இரு கர்ப்பிணிகள் மரணவீடு ஒன்றில் சந்தித்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

எனவே கர்ப்பிணிகள் பொது மக்கள் கூடும் இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் பன்றிக் காய்ச்சல் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். மேலும் கர்ப்பிணிகளோ அல்லது பிரசவித்த தாய்மாரோ காய்ச்சல் ஏற்படின், உடனடியாக, அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும், இதுவரை பன்றிக் காய்ச்சல் தொற்றுடன் இனங்காணப்பட்ட அனைத்துக் கர்ப்பிணிகளும் காய்ச்சல் ஏற்பட்ட தினத்திலேயே அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு சென்றமையால் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டுக் குணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தேசிய ஒற்றுமைக்காக ஊடகங்களின் பொறுப்பு 19 ஆம் திகதி கலந்துரையாடல்

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் ஊடகங்களின் கடமைப் பொறுப்பு பற்றி "வெலிகம பிரதேசம் மீதான ஒரு மீள்பார்வை" என்ற தலைப்பிலான கலந்துரையாடலொன்றை தேசிய ஒற்றுமைக்கான பாக்கிர் மாக்கர் நிலையம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஆகிய இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

வெலிகம பிரதேசத்துக்கு 10 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9மணிக்கு அரச தகவல் திணைக்களத்தில் மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

திகழ்வின் நோக்கம் குறித்து தேசிய ஒற்றுமைக்கான பாக்கிர் மாக்கர் நிலையத்தின் தலைவர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கர் தெளிவுபடுத்தவுள்ளதோடு, வெலிகம பிரதேசத்தின் தற்போதைய ஏற்புடைமை பற்றி அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய தெளிவுபடுத்தவுள்ளார்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் வெகுஜன ஊடகத்தின் நடிப்பாங்கு என்ற தலைப்பில் கல்கந்தே தம்மானந்த தேரர் உரையாற்றவுள்ளார்.

கலாநிதி ரியுடர் விரசிங்க, எஸ்.பிரபாகரன், ஹனா இப்ராஹிம், சுதேவ ஹெட்டியாரச்சி, ஜகத் லியனாரச்சி ஆகியோர் பங்கேற்கும் உரையாடலொன்றும் இங்கு இடம்பெறவுள்ளது.

NAVAMANI DAILY நவமணி தமிழ்ச்சேமம் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
07TH MARCH 2017 - TUESDAY

சர்வதேச கடனுதவிகளை அரசு திட்டமிட்டு கையாளுகின்றதா?

இலங்கை பாரிய கடன் சுமை மற்றும் பொருளாதார நெருக்கடியொன்றிற்கு முகங்கொடுத்துள்ளதை நாம் அறிவோம். இலங்கையின் கடன் சுமையை குடிமக்கள் தொகையால் வகுக்கும்போது ஒவ்வொருவரும் தலா நான்கு இலட்சங்கள் அளவில் கடன்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தாயின் கருவில் இருக்கும் சிசுவுக்கும் கடன் சுமை யாரு ஏன்று கேள்வியும் எழுந்துள்ளது.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் ஆகியோர் எங்கு உரையாற்றினாலும் நாம் பெரும் கடன் சுமையில் இருக்கின்றோம். கடன் சுமையின் காரணமாகவே நாட்டு மக்களுக்கு சலுகைகளையும், தொழில்வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உட்பட மேலும் பல நிதியுதவி மாநாடுகளுக்குச் சென்று, நாடு திரும்பும்போது, அதிகமான கடன், நிதியுதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவற்றை வைத்து நாட்டை அபிவிருத்தி செய்யப் போவதாக வாக்குறுதியளிப்பதும், அரசியல் நடத்துவதும் கண்கூட்சியாகின.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, தொடக்கம் தற்போதுள்ள ஆட்சியாளர்கள் வரை சர்வதேச கடனுதவிகளைப் பெற்றுக்கொண்டதை பெரும் வெற்றியாக கொண்டாடினர். கடனொன்றைப் பெற்றுக்கொண்டதை வெற்றியாகக் கொண்டாடிய ஆட்சியாளர்கள் இன்று கடனை பெரும் சுமையென்கின்றனர். கடன் பெறும்போது வெற்றியாகக் கொண்டாடியவர்கள் ஏன்று கடன் எவ்வாறு ஒரு சுமையாக மாறியது என்பதை நாடு சிந்திக்க கடமைப்பட்டுள்ளது.

இலங்கை இதுவரையில் பெற்றுக்கொண்டுள்ள கடனுதவிகளால் பயனடையவில்லை. கடனுதவிகளால் முறையான அபிவிருத்தி திட்டங்களையோ, வருமான வழிகளையோ மேற்கொள்ளவில்லை. அபிவிருத்தி திட்டங்களை தேவைகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளவில்லை.

இறுதியில் தாம் பெற்றுக்கொண்ட கடனுதவிகளால் செய்துமுடித்தவைகள் என்ன என்பதையும் கூறத்தெரியாதவர்களாகவே ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். 2016ஆம் ஆண்டு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வரவு– செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது, இலங்கை 8443 பில்லியன் கடன் சுமையில் இருப்பதாக கூறினார். 2016 மார்ச் மாதமாகும்போது பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நிதியமைச்சரின் அறிக்கையில் இடம்பெறாத புதிய கடன் தொகையாக மேலும் 1030 பில்லியன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறியிருந்தார். அப்போது, பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க 'இந்த கடன் தொகையாவது சரியானதா? என்று கேட்டபோது, இதுவும் நிச்சயமில்லை என்பதே பிரதமரின் பதில். இலங்கையின் உண்மையான கடன் தொகை இவ்வளவுதான் என்பது அரசாங்கத்துக்கோ, ஆட்சியாளர்க

ளுக்கோ, நிதியமைச்சருக்கோ தெரியாத நிலையில் நாடு பயணிக்கின்றது. நாட்டின் சரியான கடன் தொகை எவ்வளவு என்பதை ஆராய சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை வேண்டும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆறு வருடங்களில் நாட்டின் மொத்த வருமானத்தில் 10,000 பில்லியன்களுக்கும் அதிகமாக கடன் செலுத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 1300 பில்லியன் கடன் செலுத்தவேண்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. காலத்தில் இந்தியாவின் கடனுதவியில் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் 265 கிலோ மீற்றர் ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டது. 1400 கிலோ மீற்றர்களை நிர்மாணிக்கும் நிதி செலவிடப்பட்டு வெறும் 265 கிலோ மீற்றர்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதும், மாத்தறை பெலியத்தை ரயில் பாதையும், ஹம்பாலனையை தொடர்புபடுத்தும் ஜனாதிபதி மைத்திரியின் ரயில் பாதை உத்தேச திட்டமும் நாட்டில் எவ்விதவருமான, உற்பத்தி வழிகள் இல்லாத திட்டங்களுக்கு கடனுதவிகள் செலவிடப்படுகின்றன என்பதற்கான உதாரணங்களாகும்.

இலங்கை பெற்றுக்கொள்ளும் கடனுதவிகளில் உண்மையான, நாட்டுக்கு தேவையான வருமான வழிகளையும், நிலையான அபிவிருத்தி, பொருளாதார சீர்திருத்தம் போன்றவற்றை திட்டமிட்டு மேற்கொள்ள முயற்சிக்கவேண்டும். அவ்வாறில்லாத போது குடிமக்கள் கடனுக்கு பொறுப்புகூறவேண்டியதில்லை. மாறாக, கடனுதவிகளை உரிய விதத்தில் பயன்படுத்தாத ஆட்சியாளர்களே பொறுப்பேற்கவேண்டும். முன்னுரிமைகளின் அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றபோது கடன் மற்றும் சர்வதேச நிதியுதவிகள் கலையல்ல, அருள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நாலக குணவர்தன

தகவல் சட்டம்

சிலருக்கு அஜீரணமாக அமையலாம்

கவனம்!

'நான் ஒரு பட்ட மடையன். தூரம் பார்க்காது திரும்பிப் பார்க்காது, இந்தளவு மடத்தனத்தை செய்தது பற்றி எனக்கு வியப்பாக இருக்கிறது.' இவ்வாறு கூறியது ஒரு சாதாரண ஒருவர் அல்ல. 1997 முதல் 2007 வரை பிரித்தானியாவின் பிரதமராக இருந்த டோனி பிளேயரே. பெரும் மடத்தனமாக அவர் குறிப்பிட்டது பிரித்தானியாவில் தகவலறியும் சட்டத்தை அறிமுகப்படுத்தியதாகும்.

1997 பொதுத் தேர்தலில் போட்டியிடும்போது தொழில் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தகவல் அறியும் சட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். தேர்தலில் வெற்றி பெற்ற பின் 1998இல் புதிய தொழில்கட்சி அரசாங்கம் உங்களது தகவலறியும் உரிமை என்ற பெயரில் ஒரு வெள்ளைப் பத்திரத்தை வெளியேற்றியது. அதன் பின் பாராளுமன்றத்தில் தகவலறியும் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு 2000ஆம் ஆண்டில் நவம்பரில் மகாராணியின் அனுமதி கிடைத்தது.

டோனி பிளேயர்

கடந்த ஒன்றரை தசாப்தத்தில் பிரித்தானிய தகவலறியும் சட்டம் காரணமாக அரசின் இரகசியங்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைந்து கூடுதலான திறந்த ஆட்சி முறைக்கு அந்த நாடு தள்ளப்பட்டது. ராஜ குடும்பம், தேசிய பாதுகாப்பு, நீதித்துறை உள்ளடக்கிய சில துறைகளை தவிர அரச துறையில் அநேகமான துறைகள் மற்றும் பக்கங்கள் இந்த சட்டத்தின் கீழ் அந்நாட்டின் எந்த பிரஜைக்கும் தகவல்களை அறிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது.

2017ஆம் ஆண்டு அந்நாட்டில் 47 ஆயிரத்து 806 தகவல் கோரிக்கைகள் அரச நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 33, 900க்கு பதிலளிக்கப்பட்டிருந்தது. (ஏனையவற்றுக்கு பதிலளிக்க முடியாமைக்கு சட்டரீதியான காரணங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.)

அரச நிறுவனங்கள் செயல் ரீதியாக தகவல்களை வெளியிட்டிருந்தன் காரணமாக பிரித்தானிய பிரஜைகளுக்கு தகவல்களை பெறும் தேவை குறைந்திருந்தது. பிரித்தானியாவில் தகவல்களை பெறுவோரில் அரைவாசிப் பேர் சாதாரண பிரஜைகளாகும். மொத்த வேண்டுகோள்களில் 20 சதவீதத்தை ஊடகவியலாளர்கள் சமர்ப்பிக்கிறார்கள். எஞ்சியவற்றை வர்த்தக மற்றும் பொது மக்கள் அமைப்புக்களே கேட்கின்றன.

தகவல் சட்டம் அந்நாட்டின் பல்வேறு அரச மற்றும் அரச நிறுவனங்களின் ஊழல்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அதில் முழு உலகினதும் அவதானத்தால் ஈர்க்கப்பட்ட நிகழ்வானது பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கள்ளப் பற்றுச் சீட்டுக்களை சமர்ப்பித்து பாராளுமன்றத்தின் ஒதுக்கீட்டிலிருந்து செலவுகளை பெற்றுக்கொள்வதாகும். நீண்ட காலமாகஇடம்பெற்று வந்த இந்த மோசடி 2009இல் வெளியானது. விசாரணைக்குப் பின் 4 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழக்கு தொடரப்பட்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட பின் அவர்களுக்கு சிறை தண்டனை வழங்கப்பட்டது.

இவ்வாறான அனுபவம் காரணமாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உலக வியாபிப்பின் அடையாளமாக இருக்கின்ற பிரித்தானிய பாராளுமன்றத்தில் கூட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தகவல் அறியும் சட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை.

1997ஆம் ஆண்டில் மிக பிரபல்யமாக பிரதமர் பதவியை ஆரம்பித்த டோனி பிளேயர் 2001 மற்றும் 2005இல் மீண்டும் பொதுத் தேர்தல்களில் வெற்றிபெற்றாலும் அவருக்கான மக்கள் அங்கீகாரம் படிப்படியாக குறையத் தொடங்கியது. விசேடமாக 2003இல் அமெரிக்க உள்ளடங்கிய கூட்டு ஈராக்கை ஆக்கிரமித்த போது தனது நாட்டுக்கு பொய் கூறி அந்த கூட்டில் பிரித்தானியாவை இணைத்தது தொடர்பாக அவருக்கு அநேக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

அவர் 10 வருடங்களுக்கு பின்பு பதவியை விட்டுச் சென்றது தனது நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்திய தந்திரகார அரசியல்வாதியாகவே. இதன் காரணமாக 2010இல் தனது சுயசரிதையில் பிளேயர் சொல்லியிருப்பது நாம் மேற்குறிப்பிட்ட மேற்கோளில் மதிப்பீடு பற்றி வியப்படைய வேண்டியதில்லை.

தகவல் அறியும் சட்டம் ஜனநாயகத்தை பலப்படுத்துவது உண்மை. எனினும் அதனால் ஆட்சி செய்வது கஷ்டமாகின்றது. அமைச்சர்களுக்கிடையே மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கிடையே சில விடயங்கள் பேசுவதற்கும் ஆவணங்களை பரிமாறுவதற்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். எனினும் இந்த இரகசிய பரிமாற்றங்களை பின்பு தகவல்அறியும் சட்டத்தின் கீழ் பிரஜைகளுக்கு கேட்க முடியுமாக இருப்பது அரச நிர்வாகத்திற்கு பிரச்சினையாக அமையும் என பிளேயர் 2010இல் விவாதித்தார்.

ஆனால், இந்த வாதத்திற்கு எல்லோரும் இணங்கவில்லை. தகவல் உரிமை தொடர்பாக பிரித்தானிய மக்கள் இயக்கத்தின் பணிப்பாளர் மொரிஸ் பென்கல் இவ்வாறு கூறுகிறார். தகவல் சட்டத்தினால் பாராளுமன்றத்திற்கும், பொதுமக்களுக்கும், பொய் கூறுவது எந்த ஒரு அரசுக்கும் மேலும் கடினமாகவே இருக்கும். பொய் கூறினாலும், அதனை பின்பு விசாரித்து வெளிப்படுத்திக் கொள்ளலாம். சொல்லுவதை செய்கின்ற, செய்கின்றவற்றை சொல்லுகின்ற கொள்கையுள்ள அரசியல்வாதிகளுக்கு இந்த தகவலறியும் சட்டம் பிரச்சினையாக இருக்காது.

இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்பு பிரித்தானியாவில் இடம்பெற்ற இந்த பேச்சுவார்த்தை மீண்டும் கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இந்தியாவில் பிரபல தகவல் அறியும் சட்டம் தொடர்பாக செயற்பாட்டாளரான வெங்கடேஷ் நாயக் நினைவுபடுத்தினார். பொதுநலவாய நாடுகளின் மனித உரிமைகள் நிறுவனத்தின் புதுடில்லி அலுவலகத்தில் பணிபுரியும் அவர் அந்த நாட்டின் தகவல் அறியும் சட்டத்தை 2005இல் ஆரம்பித்தது முதல் அதனை சரியாக பயன்படுத்தும் ஒருவராவார். அதேபோன்று சட்டத்தின் செயற்பாடு குறித்து கவனமாக பார்த்துக்கொண்டிருக்கும் அவர் பொருத்தமான சந்தர்ப்பங்களில் அதில் தலையிடுவார். அவரது நிபுணத்துவ அறிவும், வழிகாட்டலும் இந்த நாட்டுக்கு கிடைப்பது மிக பயன்மிக்கது.

தகவல் உரிமை மற்றும் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு பங்குதாரர்களாக செயற்பட்ட சில அரசியல் தலைவர்கள் பின்பு அது தலையிடியாகி அதனையிட்டு பச்சாத்தாபப்படும் சந்தர்ப்பங்கள் அண்மித்த வரலாற்றில் இருப்பதற்கு உதாரணமாகத்தான் டோனி பிளேயரது மீள் அசைபோடுதலை குறிப்பிட்டார்.

அத்தோடு தகவல் அறியும் சட்டத்தை நிறைவேற்றியதனால் மட்டும் திறந்த அரசாங்கமொன்று ஏற்படுவது இல்லை. அதற்காக முழு அரசியல் பொறிமுறையிலும் மனோபாவ மாற்றம், சரியான பயிற்சி மற்றும் அர்ப்பணமும் தேவை. இது பூரணமடைவதற்கு பல மாதங்கள் (சில சந்தர்ப்பங்களில் பல வருடங்கள்) கழியும் என்பது ஏனைய நாடுகளின் அனுபவமாகும். தகவல் அறியும் சட்டம் ஏனைய சகல சட்டங்களிலும் மாறுபட்டது. அதனை பயன்படுத்துவது அரச அல்ல பிரஜைகளாகும். அரச நிறுவனங்கள் செய்வது அந்த சட்டத்திற்கு ஏற்ப செயற்படுவதாகும். பிரஜைகள் தகவல் சட்டத்தை பயன்படுத்தும் அளவுக்கு அரச துறை மேலும் மேலும் அந்த சட்டத்திற்கு இயையாக செயற்படுவதாக நாயக் கூறுகிறார்.

வெங்கடேஷ் நாயக்

தகவல் சட்டம் சரியாக எங்களுடைய உடலிலே இருக்கின்ற தசையைப் போன்றது. பயன்படுத்துவது அதிகரிக்கும் போது அது மேலும் பலமாகின்றது. அக்கறையற்றிருந்தால் அது பயனற்றுப் போகலாம்.

தேசிய மட்டத்தில் 2005ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தை தேசிய மட்டத்தில் அறிமுகப்படுத்திய இந்தியா இதுவரைக்கும் 5.5 - 8 மில்லியன் வரை மக்கள் தகவல்களை பெற கோரிக்கை விடுத்துள்ளன. இந்த கோரிக்கைகளில் பெரும்பாலானவை (80 சதவீதமானவை) அரச நிறுவனங்களில் மேற்கொள்ள வேண்டிய பிரஜைகளுக்குரிய சேவையை சரியாக நிறைவேற்றாது பற்றியதாகும்.

மக்கள் நிதியினால் நடத்தப்படுகின்ற அரச நிறுவனங்களின் பொறுப்புக்கூறல் பற்றி இவ்வாறு நேரடியாக கேள்வி எழுப்புவதற்கும், பதில் பெறுவதற்கும் அந்த தகவல் ஊடாக அந்த நிறுவனங்களை மக்கள் கண்காணிப்பினை மேற்கொள்வதற்கும், தகவல் அறியும் சட்டத்தால் இயலுமாகியுள்ளது. இது தானாக இடம்பெற்றதல்ல. பெரும் முயற்சி கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. இதற்காக இந்திய சிவில் சமூக அமைப்புக்கள் முக்கியமான பணியை நிறைவேற்றியதோடு நிறைவேற்றியும் வருவதாக நாயக் கொழும்பிலே நடைபெற்ற விரிவுரையில் தெரிவித்தார்.

சிவில் சமூகத்தின் சங்கப்பத்தை எங்களில் சிலர் சரியாக புரிந்துகொள்ளவில்லை. அவை முறையான அரச சார்பற்ற அமைப்புக்கள் தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், தொழில்சார் அமைப்புக்கள் அடிமட்டத்திலான தொண்டர் அமைப்புக்கள், கம்பனிகள், இளைஞர் சங்கம், மாதர் சங்கம், மரண சகாயர் சங்கம் என்பன உள்ளடங்கியுள்ளன.

இந்தியாவின் சிவில் சமூக அமைப்புக்கள் தகவலறியும் சட்டம் தொடர்பாக முக்கிய ஐந்து வகிபாகங்களை வகுப்பதாக நாயக் கூறுகிறார்.

1. தகவல் அறிதல் மற்றும் அது தொடர்பான சட்டங்களை மக்களுக்கு அறிவூட்டுதல்
2. பொது நன்மைக்கான தகவல்களை கேட்டு அரச நிறுவனங்களின் தகவல்களைப் பெறுதல்.
3. தகவல் சட்டத்தை சரியாக பயன்படுத்துவது தொடர்பாக மக்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் (விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகளை செய்வதற்கு உதவுவது உட்பட)
4. தகவல் சட்டம் சரியாக செயற்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி கண்காணித்தல் மற்றும் குறிப்பிட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபடல்.
5. பகிரங்கத் தன்மை அரசினால் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பதை அறிந்து செயற்படுவதோடு தமது நிறுவனத்தின் பகிரங்கத் தன்மையும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆரம்பத்தில் தகவல் சட்டம் பற்றி சில தவறான கருத்துக்களும், தயக்கமும் இருக்கலாம் அதனை படிப்படியாக அகற்றி சட்டத்தை பயன்படுத்துவதற்கு தேவையான ஊக்குவிப்பு மற்றும் உதவிகளை வழங்குவது சிவில் சமூகத்தின் பெரும் பொறுப்பாகும் என்றும் நாயக் தெரிவித்தார்.

இந்த சட்டத்தை பயன்படுத்தி அரச நிறுவனங்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தரணிகள் தேவையில்லை. இந்தியாவைப் போன்று எமது நாட்டிலும் குறிப்பிட்ட முறைமை சிக்கலான ஒன்றல்ல. எனினும் தேவையான மன உறுதியையும் ஆரம்ப தயார்ப்படுத்தலையும் சிவில் சமூகங்களுக்கு வழங்கலாம். பிரஜைகள் தகவல்கள் கோரிக்கைகள் சிக்கல் இல்லாது சமர்ப்பிப்பதற்கும் குறிப்பிட்ட அரச நிறுவனத்தை அடையாளம் கண்டு அதற்கு சமர்ப்பிப்பதற்கு ஓரளவு பொது அறிவும் நாடு உலகம் பற்றிய புரிந்துணர்வும் இருப்பது மிக பிரயோசனமாகும். இதற்காக இந்திய சிவில் சமூக தகவல் கிளினிக்ஸ் (Clinic) நடைபெறுகின்றது. சட்டத்தரணிகள் இல்லாமல் விண்ணப்பங்களை (அவை நிராகரிக்கப்பட்டபின்) மேன்முறையீடு செய்யப்படும் முறை பற்றி மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். இதிலே மிக உற்சாகத்துடன் செயற்படுவது ஒய்வூதியம் பெறுவோரும் மாணவர்களும் என நாயக் கூறுகிறார்.

இந்த கிளினிக்களுக்கு வர முடியாத பிரஜைகளுக்கு இலகுவாக தம் கேள்விகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மாதிரி மட்ட தகவல்கள் இந்தியா சிவில் அமைப்புக்களால் உருவாக்கப்பட்டு வெப்தளங்களில் போடப்பட்டுள்ளன. நீர்வழங்கல், மின்சாரம் வழங்கல், பாதைகளை பராமரித்தல், பொது போக்குவரத்துச் சேவை, மக்கள் சுகாதார சேவை, குப்பை முகாமைத்துவம் அரச பாடசாலைகள் போன்ற துறைகள் தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் அங்கு உள்ளன. இதற்கு மேலதிகமாக தகவல் அறியும் சட்டத்தை பலவீனப்படுத்துவதற்கு ஏதும் முயற்சிகள் எடுப்பதாக இருந்தால் இந்திய சிவில் அமைப்புக்கள் விழிப்புடன் இருக்கின்றன.

2005 - 2016 காலகட்டத்தில் 4 முறை அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பிரஜைகளது எதிர்ப்பு காரணமாக அது வெற்றியளிக்கவில்லை என்று நாயக் தெரிவித்தார்.

தகவல் சட்டம் அரச நிர்வாகத்திற்கு குறுக்கிடுகின்றது. அபிவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என சிலர் வாதித்தனர். இது இலங்கையிலும் ஏற்படலாம். அத்தோடு இந்த சட்டத்தை பயன்படுத்தி தேவையற்ற கேள்விகளை எழுப்புவதாக சில அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், இந்தியாவில் குறை கூறுகிறார்கள். எனினும் ஜனநாயக கட்டமைப்பில் அரசின் பொறுப்பு தனிப் பிரஜைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்த முடியாது என நாயக் கூறுகிறார். இந்தியாவில் பலவித அனுபவங்களின் அடிப்படையில் அவர் எங்களுக்கு கூறும் புத்திமதி இவையே. தகவல்களை சரியாக பெற்றுக்கொள்வதற்கு கூட்டாக அணி திரளுங்கள். தகவல்களை கேட்கும் பிரஜைகளை தனிமையாக விட இடமளிக்காதீர்கள். தனிப்பட்ட தேவைக்கோ அல்லது பொதுத் தேவைக்கோ தகவல்களை கோரும் சகோதர பிரஜைகளை முடிந்தளவு ஊக்குவியுங்கள்.

இலங்கையில் இன்னும் தகவலறியும் சட்டம் பதிதாகும். அதனை சமூகமயப்படுத்தி கூடுதலாக பயன்படுத்துவதற்கு பிரஜைகளும் சிவில் அமைப்புக்களையும் ஊக்குவிக்க வேண்டும். பாராளுமன்றத்தில் ஏகமனதாக எல்லாக் கட்சிகளும் வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்ட இந்த சட்டத்தை மேம்படுத்துவதன் பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உள்ளது.

இந்த சட்டம் நல்லாட்சி அரசின் தேர்தல் வாக்குறுதியாகும். விரும்பினால் அது பற்றிப் பெருமை பேச அரசுக்கு உரிமை இருக்கிறது. எனினும் பிரஜைகளான எங்களது உரிமை, பொறுப்பு அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ கஷ்டத்துக்கு உள்ளாக்கப்படுவார்களா இல்லையா? என்பதை கவனத்தில் கொள்ளாது இந்த சட்டத்தால் முடிந்தளவு பிரயோசனப்படுவதாகும்.

மாவனல்லை பதுரியா கட்டட நிர்மாணத்துக்கு தடைவேண்டாம்

ஐந்து மாதத்துக்குள் நிறைவு செய்யவும்

முதலமைச்சர் மஹிபால உத்தரவு

(குருநாகல் இக்பால் அலி)

3000 மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைக்கு கேட்போர் கூடத்திற்கான பாரியளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டடத்திற்கு சூழ்ச்சிகள் செய்து இடையூறு விளைவிப்பார்களாயின் அது மாணவர் சமுதாயத்திற்கு செய்யும் பெரும் அநீதியாகும் இந்தக் கட்டடம் இல்லாமல் போவது மாணவர் சமுதாயத்திற்குச் செய்யும் அநீதியாகும். இதனுடைய முழுப் பயனையும் அடையப் போவது மாணவச் சமுதாயமாகும்.

இதை யார் தடுத்தாலும் இதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம், பாடசாலை அபிவிருத்தி நிதியம், பெற்றோர்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களும் ஒன்று பட்டு இக்கட்டட நிர்மாணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எந்தத் தடையுமின்றி ஐந்து மாத காலத்திற்குள் இக்கட்டட நிர்மாணப் பணியை மிகவும் துரிதமாக முடித்துத்தர வேண்டும் என நான் பொறியியலாளர் கவிடம் உத்தரவாதம் விடுத்துள்ளேன் என்று சப்ரகமுவ முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

மாவனல்லை பதுரியா முஸ்லிம் மத்திய கல்லூரியின் பாடசாலை மாணவர்களுக்கு பேண்ட் வாத்தியக் கருவிகள் கையளித்தல் மற்றும் 3 கோடி 55 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடத்தின் வேலைத் திட்டத்தை பார்வையிடும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். டி. எம். நிஸ்தார் தலைமையில் நேற்று இடம்பெற்றபோதே இதில் கலந்து கொண்ட முதலமைச்சர் மஹிபால ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் அடி மட்டத்தில் சிலர் சூழ்ச்சிகள் செய்கின்றனர் இதை யாரும் மறக்க வேண்டாம். இந்த கட்டடம் அமைவது எமது மாணவச் செல்வங்களுக்காகும். ஒரு வாரத்துக்குள் சகல வேலைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என கொந்திராத்தினைப் பெற்றுள்ள நபரிடம் கடுமையாக வலியுறுத்திக் கூறியுள்ளேன். உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதியே நான் இங்கு வந்துள்ளேன். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இன்னுமொரு பேண்ட் வாத்திய கருவியையும் நான் வழங்கவுள்ளேன்.

ஐந்து மாதத்திற்குள் இந்த கட்டட நிர்மாணப்பணிகள் முடிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட வேண்டும். எங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் எந்தவிதமான இலாபமும் கிடையாது. மாணவர் சமுதாயத்திற்காகத் தான் இந்த வளங்கள் அவசியமாகும். நமது பிள்ளைகள் படிக்கும் பாடசாலைக்கு வளங்கள் கிடைப்பதையிட்டு நாங்கள் சந்தோசப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சமீபத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தைப் பார்வையிட்ட முதலமைச்சர் மஹிபால ஹேரத் பொறியியலாளர் மற்றும் கொந்துறாத்துக்காரர் மற்றும் அதிகாரிகளிடம் வேலைகளை ஆரம்பித்து துரிதமாக முடித்துத் தர வேண்டும் என கடுமையான உத்தரவை விதித்தார்.

இதில் வலயக் கல்விப் பணிப்பாளர், கட்டிட நிர்மாணப் பொறியியலாளர், பதுரியா அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் எம். எம். எம். பதுத் மற்றும் கேகாலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் லத்திப் பாரூக் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கம்பஹா மாவட்டத்தில் 2,192 பேருக்கு டெங்கு

கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

(மினுவாங்கொடை நிருபர்)

கம்பஹா மாவட்ட பியகம தொகுதியில், மாகொல தெற்குப் பிரதேசத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவியுள்ள நிலையில், இந் நோய் மாகொல வடக்குப் பகுதிக்கும் பரவாமல் இருப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக, தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் முஹம்மத் தௌபீக் தெரிவித்துள்ளார்.

மாக்கொல முஹியித்தீன் ஜும் ஆப் பள்ளிவாசலில், கடந்த வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகையின் பின்னர், டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வுக் கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட டாக்டர் தௌபீக், மக்களுக்கு இது தொடர்பில் விரிவான விளக்கமளித்தார். டாக்டர் இங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது, சுகாதார அமைச்சினாலும், டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவினாலும் மாத்திரம், இந்த நோயை முற்றிலும் ஒழிக்க முடியாது. எனினும், தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவினர், இந் நாட்களில் பியகம தொகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்பூட்டல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு இப்பிரதேச மக்கள், தமது பூரண ஒத்துழைப்பை வழங்க முன் வரவேண்டும். மக்கள் பூரண பங்களிப்பை வழங்காமல் இருப்பதும், டெங்கு ஒழிப்பில் கவனயீனமாக இருப்பதுமே, டெங்கு நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்திற்குப் பிரதான காரணமாக அமைகின்றது.

வீடுகள் மிகவும் அழகாக இருக்கலாம். ஆனால், சுற்றாடல் டெங்குக் கிடங்குகளாக இருப்பது, மிகப் பயங்கரமான ஆபத்துக்களையும், விளைவுகளையும் உண்டாக்கும். எனவே, மக்கள் டெங்கு ஒழிப்பினால் ஏற்படும் நன்மைகளைக் கருத்தில் கொண்டு, வீட்டின் சுற்றுச் சூழலையும் எப்பொழுதும் எந்நேரமும் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பது மிக மிக அவசியம்.

இப் பிரதேச மக்கள் பெரும் அச்சம் கொண்டுள்ள நிலையில், இங்கு டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்கு, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால், மக்களை விழிப்பூட்டும் பாரிய வேலைத் திட்டங்கள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ் வருடத்தில் இதுவரை காலப் பகுதிக்குள், கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 2,192 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், சுகாதார அமைச்சினால் கம்பஹா மாவட்டம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில், மீண்டும் டெங்கு நோய் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டுவதற்கு, மார்ச் மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை, டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. இவ் வார காலத்திற்குள்ளும் பியகம தொகுதி வாழ் சகல இன மக்களின் பூரண ஒத்துழைப்பை அவசியமாக நாம் எதிர்பார்க்கிறோம் என்றார்.

வாகன விபத்தொன்றில் சிக்கி உயிர்தப்பிய சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் கம்புறுகமுவ விஜிதநாயக்க தேரரை தேசிய சூராசபை உறுப்பினர்கள் களனியிலுள்ள அவரது விகாரைக்குச்சென்று நலம் விசாரித்தபோது சூரா கவுன்சில் தலைவர் தாரிக் மஹ்மூத் பொருளாளர் மௌலவி லியாத் இப்றாஹிம் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மௌலவி தல்லீம், டாக்டர் சைபுல் இஸ்லாம் ஷெய்க் முனிர் முசப்பர் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

மருதமுனையில் கல்வி அபிவிருத்திச்சபை ஸ்தாபிப்பதற்கான ஒன்றுகூடல்

கல்முனை கல்வி வலையத்தின் கீழ் உள்ள பிரதேசங்களில் கல்வி நிலையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கல்வி அபிவிருத்திச் சபையை உருவாக்கும் பணி தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டமானது விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் கல்முனை கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவருமான எச்.எம்.எம்.ஹரீஸின் வழிகாட்டலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மருதமுனையில் கல்வி அபிவிருத்திச் சபையை ஸ்தாபிப்பதற்கான ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலய மண்டபத்தில் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல், கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல்.சக்காப் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது.

இதில் ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிகள், பல்கலைக்கழக பதிவாளர்கள், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், அரசியல் தலைவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், துறைசார்த்தவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என சுமார் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். மருதமுனையின் கல்வி அபிவிருத்தி தொடர்பான சமகால நிலை தொடர்பில் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இறுதியில் மருதமுனையின் கல்வி அபிவிருத்திச் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் போது பின்வருவோர் நிருவாக சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.பி.எம்.இஸ்மாயில், செயலாளர்- உதவி விவசாயப் பணிப்பாளர் ஏ.எஸ். எம்.ஹரீஸ், பொருளாளர் - இறைவரி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எம்.ஐ.எம்.உவைஸ், உதவித் தலைவர் கே.எம்.சுக்ரி, உதவிச் செயலாளர் ஏ.எம். ஹம்ஸா முகையதீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பாடசாலை அதிபர்களையும் இதில் இணைத்துக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே சமயப்பற்றுள்ளவர்களாக மாற்றவேண்டும்

நுக கஹதமன பள்ளிவாசல் இமாம் அம்ஸா லெப்பை

(பொலன்னறுவை நிருபர்)

இலத்திரனியல் யுகத்தில் வாழும் நாம் அவற்றில் மயங்கிவிடாது எமது பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே சமயப்பற்றுள்ளவர்களாகவும் பண்பாடுகள் மிக்கவர்களாகவும் வளர்ப்பது பெற்றோரின் முன்னுள்ள மகத்தான பொறுப்பு என நுககஹதமன முகையதீன் பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி எஸ்.ஏ. அம்ஸா லெப்பை கூறினார்.

மின்னேரி தேர்தல் தொகுதிக்குட்பட்ட நுககஹாதமன முகையதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை மற்றும் நுககஹாதமன ஸ்டார் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த மேற்படி பள்ளிவாசல் குர்ஆன் மத்ரஸா மக்தப்பில் ஹுதா 1ஆம் ஆண்டு பூர்த்தி பரிசளிப்பு வைபவம் நுகக ஹாதமன முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சகல மதத்தைச் சேர்ந்த மதத் தலைவர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உட்பட பொதுநல அமைப்புக்கள் மற்றும் மகளிர் அமைப்புகளும் பங்குபற்றினர்.

மக்தப்பில் ஹுதா குர்ஆன் மத்ரஸா மாணவ மாணவிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டிகள், இஸ்லாமிய கீதங்கள் இஸ்லாமிய நிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன.

இமாம் மௌலவி அம்ஸா லெவ்வை தமதுரையில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலகத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் மீலாத் விழா போட்டிகளில் எமது பிரதேச மாணவர்கள் பங்கு பற்றி இரண்டாம் மூன்றாம் இடத்தை தன்வசப்படுத்திக் கொண்டார்கள்.

சிறுவயதிலிருந்து பிள்ளைகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது கலாசாரம் கல்வி, ஒழுக்கம், பிள்ளைகளின் எதிர்காலத்தை சிந்தித்து இப்பிரதேசத்தில் உள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இது போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்து அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் போது பெற்றோர்கள் சந்தோஷப்படுவது போல் எனக்கும் அது பெருமையே. இப்பிரதேசத்தில் உள்ள சகலரும் இணைந்து ஒற்றுமையுடன் செயற்பட்டதன் பயனாக இப்பாடசாலைக்கு 3 மாடிக் கட்டடத் தொகுதியுடன் பாடசாலைக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இப்பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெறும் சமய, கலாசார நிகழ்வுகளில் சகல இனத்தைச் சேர்ந்த பொதுநல அமைப்புக்களும் பங்குபற்றி முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து பல நிகழ்வுகளுக்கு பக்க பலமாக செயற்படுகின்றதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்படவேண்டும். கிரித்தலை குடியேற்ற சுக்கிரபோதி விகாரை பிரதம தேரர் வரதிவல தம்மாரம மின்னேரி பொலிஸ் அதிகாரி பந்துல புஷ்பகுமார மற்றும் பொதுநல அமைப்புக்களின் தலைவர்கள் உட்பட ஆசிரியர்களும் தொடர்ந்து உரையாற்றினர்.

மனித உரிமை ஆணையகத்தின் கால அவகாசத்தை வரவேற்கிறேன்

(வத்துகாமம் நிருபர்)

மனித உரிமை மீறல் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசுக்கு மேலும் ஒரு வருட கால அவகாசம் கிடைத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டிக்கு விஜயம்செய்த அமைச்சர் ராஜித சேனாரத்ன அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியின் ஆயுட்காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும். தற்போதைய அரசின் ஆயுட்காலம் ஆகஸ்டுடன் முடியப்போவதாக ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியினர் கனவு காண்கின்றனர். ஆனால் அவர்களே அவ்வாறு தமது ஆயுளை முடித்துக்கொள்வர். ஒருங்கிணைந்த எதிர்க்சியினரின் ஆயுட்காலம் ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் என்பதை அவர்கள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் சொத்துக்களை சூறையாடியவர்கள் சிறைக்குச் செல்லும் காலம் ஆகஸ்ட் மாதமாகும் போது ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ராஜித

ஹபுகஸ்தலாவையில் கௌரவிப்பு விழா

(ஹபுகஸ்தலாவை நிருபர்)

ஹபுகஸ்தலாவை அல்மின்ஹாஜ் தேசியப்பாடசாலையில் 2015 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் 9 ஏ சித்திகளைப்பெற்ற 59 மாணவர்களையும் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவான 16 மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாராட்டு விழா 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ஐ.ஏ. அப்சான் தலைமையில் கீழ் நடைபெறவுள்ளது.

மேற்படி ஹபுகஸ்தலாவை அல்மின்ஹாஜ் தேசியப்பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாராட்டு விழாவுக்கு பிரதம அதிதியாக கொத்மலை வலயக் கல்விப்பணிப்பாளர் ஈ.எம்.டி. ஏக்கநாயக்க மாணவர்களது பெற்றோர்கள் இப் பாடசாலை முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

பொத்துவில் பிரதேசத்தில் கல்வி கற்கின்ற வறிய மாணவர்களின் கல்வி நலன் மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் அலன் மதுசிக்கா அசோசியேஷன் பெத்தோட்ட நிறுவனம் இன்று (5) பொத்துவில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் முகமாக 10 துவிச்சக்கர வண்டிகளை தெரிவு செய்யப்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கி வைத்தது. பொத்துவில் மதுசிக்கா விலேஜ்ஜில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் அலன், செயலாளர் நிறோஸ் முகம்மட் , ஐக்கிய தேசிய கட்சி பொத்துவில் அமைப்பாளர் எஸ். எம். கபீர் மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர், நலன் விரும்பிகள் என ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.

(பொத்துவில் தாஜகான்)

பெயர் மாற்றம்

கற்பிட்டி வன்னி முந்தலை வசிப்பிடமாகக் கொண்ட கச்சகடுகே அசங்க தேசப்பிரிய பண்டாரந்து ஆகிய நான் 2010 ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை முஹம்மது அசாம் என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

முஹம்மது அஸாம்

பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், மருதங்கேணி தெற்கு, தாளையடி என்ற முகவரியில் வசித்து வரும் ஜீவரத்தினராசா ஜீவிதா ஆகிய நானும் (பிறப்புச் சான்றிதழ் பத்திர இல.5390) எனது மகளான தனுஸ்கா (பிறப்புச் சான்றிதழ் பத்திர இல.9861) என்பவரும் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எங்களது பெயரை முறையே ஜீவரத்தினராசா ஸீனதுன்னிஸா என்றும் பாத்திமா அப்ஸா என்றும் மாற்றிக் கொண்டோம் எனவும் இனி சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பிடுவோம் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகிறோம்.

ஜீவரத்தினராசா ஸீனதுன்னிஸா
பாத்திமா அப்ஸா

வானிலும் பூமியிலும் முதலாவது பாவம்

அல்லாமா அபுல்லைஸ் ஸமர்கந்தீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தமது நூலான தம்பிஹுஸ் ஃகாஃபிலீனில் இப்படிக் குறிப்பிடுகிறார்கள், வானத்திலே நடந்த முதல் பாவமும், பூமியில் நடந்த முதல் பாவமும் பொறாமை எனும் தீயகுணத்தால் தான். ஷைத்தான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூதச் செய்ய மறுத்ததும் பொறாமையால் தான்.

ஷைத்தான் இறைவனிடம் நான் அவரை விட உயர்ந்தவன் என்னை நெருப்பால் படைத்தாய், (ஆதமை) அவரை களிமண்ணால் படைத்தாய் என்றான். (அல்குர்ஆன்: 7:12)

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததிகளில் காபில் ஹாபிலைக் கொன்றதும் பொறாமையால் தான்.

இறுதியில் தன்னுடைய சகோதரனைக் கொலை செய்யும்படி அவனுடைய மனம் அவனைத் தூண்டியது. அதனால் அவரை அவன் கொலை செய்தான். ஆதலால் அவன் பேரிழப்பிற்கு ஆளாகிவிட்டான். (அல்குர்ஆன்: 5:30)

இந்த பொறாமை தான் உயர்ந்த நிலையில் இருந்த ஒருவனை மிகவும் கேவலமான வனாக மாற்றியது, சகோதரத் துவத்தோடும், வாஞ்சையோடும் வாழவேண்டிய ஒருவனை கொலைக் குற்றவாளியாகம் மாற்றியது.

ஆகுலால் தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அருட்கொடைகள் நிரப்பமாக வழங்கப்பட்டிருப்பவரை பார்க்காதீர்கள் என்று எச்சரிக்கை செய்தார்கள்.

இன்று பெரும்பாலானவர்கள் பிறரின் வளங்களையும், நிம்மத்களையும் கண்டு பொறாமை கொள்கின்றனர். எனவே, அவர்களுக்கு மனநிம்மதி கிடைப்பதில்லை.

அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: (செல்வம், உலக வசதி வாய்ப்புகள், செல்வாக்கு ஆகியவற்றில்) உங்களுக்குக் கீழிருப்பவர்களைப் பாருங்கள். (உலகாதாய நோக்கங்களின் அடிப்படையில் பார்க்கும் போது) உங்களை விட மேலிருப்பவர்களைப் பார்க்காதீர்கள்.

ஏனெனில், அல்லாஹ் உங்களுக்கு அருளியிருக்கின்ற அருட்கொடைகள் உங்களுடைய பார்வையில் மதிப்பிழந்து போய் விடாமல் இருப்பதற்கு இந்த நடத்தையே அதிகப் பொருத்தமானதாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்: புகாரி, முஸ்லிம்)

பிறரின் வளங்களப் பொறாமைக் கண்கொண்டு பார்ப்பதால் இறைவனுக்கு நன்றி செலுத்துகிற உணர்வு போய், மனக்குறைகளும், மனக்கசப்புகளும் ஏற்பட்டு மனநிம்மதியும், மனஅமைதியும் பறிபோய்விடும். இந்த மாதிரி தருணங்களில் அல்லாஹ் நமக்கு ஒரேயொரு வாய்ப்பைத் தந்திருக்கின்றான்.

அல்லாஹ்விடம் அவனுடைய அருள் வளங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன்: 4:32)

நபித்தோழர்களின் வாழ்க்கையை வாசித்துப் பார்க்கும் வாய்ப்பு கிடைப்போர் வாசித்துப் பார்த்து விட்டு வியப்பின் விளிம்பிற்கே வந்து விடுவார்கள். அவ்வளவு ஆச்சரியமான வாழ்வை அவர்கள் வாழ்ந்து சென்றிருக்கின்றார்கள்.

இலட்சத்திற்கும் மேற்பட்ட நபித்தோழர்கள் இருக்க, பத்து தோழர்களை பெயர் குறிப்பிட்டு இவர்கள் சுவனத்தில் இருப்பார், இவர் சுவனத்தில் இருப்பார் என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்த போது ஏனைய நபித்தோழர்களில் ஒருவர் கூட அல்லாஹ்வின் தூதரே! நான் இந்த மார்க்கத்திற்காக எவ்வளவு தியாகங்களைச் செய்திருக்கின்றேன், எவ்வளவு இழப்புகளைச் சந்தித்திருக்கின்றேன், நான் எவ்வளவு இபாதத்களைச் செய்திருக்கின்றேன், நான் இன்னின்னவரை விட எதில் குறைந்து போனேன், ஏன் எனனைக் குறித்தும் நீங்கள் சோபனம் சொல்லவில்லை என்று வினா எழுப்பவில்லையே?

எந்த ஒரு நபித்தோழரும் வேறெந்த நபித்தோழருக்கு வழங்கப்பட்டிருந்த எந்த ஒன்றைக் கண்டும் கண நிமிடம் கூட பொறாமை கொண்டதாகவோ, பேராசை கொண்டதாகவோ வரலாற்றின் எந்த ஒரு பக்கத்திலும் நாம் பார்த்திட முடியாது.

அப்படி அப்பழுக்கற்ற, தூய்மையான ஆச்சரியம் மிக்க வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து சென்றிருக்கின்றார்கள்.

எனவே, பேராசையையும், பொறாமையையும் தவிர்த்து வாழ முயற்சிப்போம். நிம்மதியிழப்பிலிருந்து தவிர்ந்து வாழ்வோம்.

பூமியைப் போன்ற பொறுமை!

(கே.ரஹ்மதுல்லாஹ் மஷ்ஹரி)

கோபத்தின் மூலம், நன்மையா? தீமையா? என்று தனிமையில் நாம் சிந்தித்துப் பார்த்தால், நன்மையை விட தீமையே நிறைந்து காணப்படும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்,

"ஒருவன் உங்களை அவமானப்படுத்தினால், ஏளனம் செய்தால், குறைகண்டால், பலருக்கு மத்தியில் மானபங்கப்படுத்தினால், அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பதில் தரும் வகையில் நீங்களும் அவனை ஏசவோ அவமானப்படுத்தவோ வேண்டாம்! ஏனெனில் அவன் உங்களுக்கு எதிராகப் பேசிய அந்த வார்த்தையே, செய்த அந்தச் செயலே, அவனை அவமானப்படுத்தப் போதுமான ஒன்றாகும்"!. (அபூதாவூது)

(இறைவன் மீது பயபக்தியுடையோர்) தங்களின் கோபத்தை மென்று விழுங்கி விடுவார்கள். மனிதர்களின் குற்றங்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் இத்தகைய நல்லோர்களை நேசிக்கின்றான் (அல்குர் ஆன் 3:134)

பொதுவாக இந்த உலகில் வாழும் நாம் ஒவ்வொருவருமே, விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், பிறமனிதரோடு இணைந்தே வாழ வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அந்தப் பிறமனிதன், நமது கணவனாக, மனைவியாக, நண்பனாக, உறவினராக, சக பணியாளனாக, சகோதர மதத்தைச் சார்ந்தவனாக இப்படி பல்வேறு வகையினராக இருக்கலாம்.

இவர்கள் அனைவருமே, நல்லவர்களாக இருந்திடுவதில்லை. அவர்களில் ஒருசிலர் தீயவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் நமக்குத் தீங்கு விளைவிக்கும்போது அவமானப்படுத்தும்போது ஆத்திரம் வரும். பழிவாங்க வேண்டும் என்று நமது உள்ளம் ஆர்ப்பரிக்கும். அதுதான் இயற்கையும் கூட.

ஆனால், உலகில் வாழும் ஒவ்வொருவருமே இப்படி பழிவாங்கும் எண்ணத்தோடு அலைந்தால் அல்லது திருப்பித் தாக்க ஆரம்பித்துவிட்டால், உலகில் உடலாலும்- மனதாலும் ஊனமுற்றவர்களே நிறைந்து காணப்படுவார்கள்.

உலகில் ஏற்படும், அத்தனை பிரச்சினைகளுக்கும் அடித்தளம், என்னவென்று நீங்கள் யோசித்துப் பார்த்தால், இந்த சகிப்புத்தன்மை இல்லாததுதான் முக்கிய காரணம் என்பதை நாம் உணரலாம். எனவேதான், மேற்கண்ட இறைவசனத்தின் மூலம் இஸ்லாம் இந்த சகிப்புத் தன்மையை இறைநம்பிக்கையாளனின் பண்புகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. கோபம் கூடாது என்று அது கூறவில்லை. அதை மென்று விழுங்கிவிடுமாறு வலியுறுத்துகிறது.

யுத்தகளத்தில் எதிரிகளை வெற்றி வாகை சூடுபவன் உண்மையில் வீரன் அல்ல. கோபம் வரும்போது, அதை அடக்கும் வலிமை பெற்றவனே, எதார்த்தத்தில் வீரன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இயம்பினார்கள்.



மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் ஏன் கொண்டாடுகிறோம்...

சர்வதேச மகளிர் தினம் ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப் படுகிறது. அந்தவகையில் ஆண்டும் தோறும் இலங்கையிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் சர்வதேச மகளிர் தினம் இம்முறை கொண்டாடப்படவுள்ளது.

ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது என்றே குறிப்பிட வேண்டும். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினர். வீட்டு வேலைகளை செய்வதற்காக பெண்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்பக் கல்வி கூட தரப்படாமல் மறுக்கப்பட்டது.

1857 ஆம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது.

ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

இதனால் பெண்கள் மிகுந்த வருத்தமடைந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக்கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு இதற்கு செவி கொடுக்கவில்லை.

இதனால் அமெரிக்கா முழுவதும் பெண் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் இறங்கினர், 1857 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி இதற்கான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர். அதன் பிறகு 1907 ஆம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடத்தது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு அவர்கள் காட்டினர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜெர்மனி கம்யூனிஸ்ட் தலைவர் கிளாரே செர்க்னே, மார்ச் 8ம் திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை.

1920 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பிட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் திகதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

இதையடுத்து 1921ஆம் ஆண்டு முதல் மார்ச் 8ஆம் திகதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975 ஆம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா பிரகடனப்படுத்தியது.

தற்போது ரஷ்யா, உக்ரைன், உஸ்பெஸ்கிஸ்தான், வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஆர்மேனியா, அஜர்பைஜான், பெலாரஸ், புர்கினியா பெசோ, கம்போடியா, கியூபா, கஜகஸ்தான், மால்டோவா, மங்கோலியா, மான்டேநெக்ரோ, தஜிகிஸ்தான், துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுகிறது.

வாய் துர்நாற்றத்திற்கான காரணம்

பற்களில் உள்ள பிரச்சினைகளால் மட்டுமின்றி நீரிழிவு மற்றும் வயிற்றில் ஏற்படும் சரியான பிரச்சினைகளாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படும்.

வாயின் சுகாதாரத்தை பற்றிய கவனக் குறைவு, அலட்சியம், பற்களில் உணவு தங்குதல், நாக்கை சுத்தப்படுத்தாமல் இருப்பது போன்ற காரணங்களினால் துர்நாற்றம் அதிகமாகும்.

எனவே, வாயை சுத்தமாக அலசி, ஒழுங்காக பல் துலக்கவேண்டும், பற்களில் பிரச்சினை இருந்தால் குறிப்பிட்ட சிகிச்சை அளித்தல்வேண்டும். வாய் துர்நாற்றத்தை குறைப்பதற்கு இயற்கை முறையும் சிறந்தது. அந்தவகையில் துளசி இலையை ஒவ்வொறு நாளும் மெல்வதன் மூலம் வாய் துர்நாற்றம் நாளாந்தம் குறைய ஆரம்பிக்கும்.



வேகமாக முடி வளர

வெங்காயத்தை அரைத்து சாறு எடுத்து அதனுடன் சிறிது தேன் கலந்து தலையில் தடவி, 15 நிமிடம் கழித்து தலைமுடியை அலசினால், ஒரே வாரத்தில் முடி உதிர்தல் குறைவதை காண்பீர்கள்.

தேங்காய் பால் ஒரு கப் எடுத்து அதில் எலுமிச்சை சாறு அரை மூடி கலந்து தலையில் தடவி 20 நிமிடம் கழித்து தலைமுடியை அலசினால் நல்லது.

முட்டையை நன்றாக முழுவதும் நுரைக்கும்படி அடித்து அதில் ஒலிவ் எண்ணெய் மற்றும் தேன் கலந்து க்ரீம் போல் வரும்படி கலக்குங்கள்.

இந்த கலவையை தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து தலையை அலசவும்.

நெல்லிக்காய் சாறு அரை கப் எடுத்து தேங்காய் எண்ணெய்யில் கலந்து மிதமான தீயில் காய்ச்சுங்கள்.

பிறகு அதில் எலுமிச்சை சாறு 2 தேக்கரண்டி கலந்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து தலைக்கு குளிப்பது நல்லது.

அன்புடன் நுண்மணி

பா.மலரம்பிகை

அம்பாறை ஊடகவியலாளர்களின் வடக்கு நல்லிணக்க பயணம்

- மருதமுனை பி.எம்.எம்.ஏ.காதர்

அம்பாறை மாவட்ட ஊடக வியலாளர் சம்மேளனத்தின் மூன்று நாள் வட மாகாண ஊடக நல்லிணக்க களப் பயணம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.கடந்த 26ஆம் திகதி காலை 5.00மணிக்கு அக்கரைப்பற்றில் இருந்து சம்மேளனத்தின் தலைவர் மீரா எஸ்.இஸ்ஸதீன் தலைமையில் பிரதித் தலைவர் ஏ.எல்.எம்.சலீமின் வழிகாட்டலில் பயணம் ஆரம்பமாகியது.

சம்மேளனத்தை இருபது உறுப்பினர்கள் இந்தக் களப் பயணத்தில் இணைந் திருத்தனர் விஷேட விருந்தினராக பிறை எப்.எம்.கட்டுப்பாட்டாளர் பஷீர் அப்துல் கையும் இணைந்து கொண்டு எமது பயணத்தின் நிகழ்வுகளை அவ்வப்போது உறுப்பினர்களின் கருத்துக்களோடு பிறை எப்.எம்.வானொலியில் நேரடியாக அஞ்சல் செய்தார்.

திருகோணமலை ஊடாக புல்மோட்டை சென்றடைந்து அங்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் டைப் பார்வையிட்டோம்.அதன் பின் அங்கிருந்து புறப்பட்டு இடையில் மதிய போசனம் உண்டு விட்டு முல்லைத்தீவை நோக்கி பயணம் தொடர்ந்தது மாலை 4.30 மணியளவில் முல்லைத்தீவைச் சென்றடைந்தோம்.

அங்கு வெட்ட வெளியில் வெறும் தரையில் பொலித்தீன் உறைகளால் நிழல் போட்டு சிறுவர்கள்,முதியவர்கள் என தங்கியிருந்த கேப்பாப்புலவு பிலக்குடியிருப்பு மக்களின் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற நிலத்திற்கான கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அந்த மக்களோடு இணைந்து அவர்களின் துன்பங்களை விசாரித்து அவர்களுக்கு எமது உறுப்பினர்கள் ஆறுதல் கூறி அமைதிப்படுத்தினர்.

அங்கிருந்து ஆறு மணியளவில் யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்பட்டு இரவு எட்டு மணிக்கு யாழ்ப்பாணத்தை சென்றடைந்தோம் அங்கு யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசல் முன்பாகவுள்ள விடொன்றில் இரவு தங்கினோம். இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு பயண அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டோம். மகிழ்வான பயணம் நிம்தியாக உறங்கினோம்.

27-02-2017 இரண்டாம் நாள் பொழுது புலர்ந்தது யாழ். பல்கலைக் கழம் சென்று பார்வையிட்டோம் அங்குள்ள நூலகம் பழங்காலத்தையே கட்டி நிற்கின்றது. இன்னும் நவீனமடையவில்லை. பழைய கட்டங்கள் கடந்த காலத்தையே காட்டுகின்றன.

அதைத்தொடர்ந்து சங்கிலிய மன்னனின் கோட்டை மற்றும் சங்கிலியன் சிலையையும் பார்வையிட்டோம். அதன்பின் கிட்டுப் பூங்கா.சுன்னாகம் சந்தை,யாழ் சந்தை என்பவற்றைப் பார்வையிட்டதுடன் பொருட்களையும் கொள்வனவு செய்து கொண்டோம். மதிய போசனத்துக்காக தங்குமிடம் சென்றடைந்தோம். உண்ட களைப்பில் சிறு ஓய்வு எடுத்துக்கொண்டோம்.

ஓய்வின் பின் ஒல்லாந்தர் கோட்டை,யாழ் நூலகம் என்பவற்றைப் பார்வையிட்டு மண்கும்பான பள்ளிவாசல் ஊர்காவத்துறை பார்வையிட்டதுடன் தங்குமிடம் திரும்பினோம்.திரும்பும் திசையெல்லாம் யுத்த வடுக்களின் அகோரம் மனதைக் காயப்படுத்தியது மனம் கனத்தது இன,மத பேதமின்றி அழிந்து போன ஆயிரக்கணக்கான உயிர்கள் இந்த மண்ணில் சங்கமமாயிற்று.

உள்ளம் நிறைந்த வேதனையுடன் இரவு 7.00 மணிக்கு தங்குமிடம் வந்து சேர்ந்தோம் மனங்களில் சந்தோஷமில்லை விரட்டப்பட்ட முஸ்லிம் சமூகங்களை மனதில் நினைத்தவாறு உறங்கலில் சாய்ந்தோம்.

இங்கு தமிழ், முஸ்லிம் அரசியல் களநிலவரங்கள், முஸ்லிம் மக்களின் இடம் பெயர்வு, யுத்தகால நிகழ்வுகள் முஸ்லிம்களின் மீள் குடி

2017-02-28 மறுநாள் காலை சுப ஹுஹ் தொழுகையுடன் பொழுது புலர்ந்து. காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு 8.30மணிக்குப் புறப்பட்டோம் யாழ் ஒஸ்மானியா கல்லூரியை நோக்கி 1963ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை கடந்த கால யுத்தக் கொடுமைகளை முழுமையாக அனுபவித்து சோர்ந்து போய் களை இழந்து காணப்பட்டது. தற்போதைய அதிபர் எம்.எஸ்.எம்.அஷ்ரபைச் சந்தித்து பாடசாலையின் தற்கால கள நிலவரங்களை அறிந்து கொண்டோம் யுத்தம் சுமந்த வேதனையுடன் கட்டங்கள். குறைந்த மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் பாடசாலை இயங்குகின்றது.வசதிகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பாடசாலையில் இணைவதும் குறைவாகவே உள்ளது.

அங்கிருந்து விடைபெற்று அங்கிருந்து மன்னார் முருங்கன் ஊடாக பகல் 1.00 மணிக்கு வேப்பங்குளம் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலை அடைந்து அங்கு லுஹர் தொழுதுவிட்டு பகல் போசனம் உண்டுவிட்டு மறிச்சுக்கட்டி பிரதேசத்தை நோக்கி பயணித்தோம் அந்தப்பிரதேசத்தை காண்பிப்பதற்கு அங்குள்ள சகோதரர் ஏ.சி.எம்.நதீர் எங்களுக்கு உதவினார்.

அவரின் வழிகாட்டலில் பயணத்தைத் தொடர்ந்தோம். அங்கு மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் காடுமண்டிக்கிடந்து யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் படிப்படியாக குடியேறத் தொடங்கியுள்ளனர் அமைச்சர் றிஷாட் பதியுதீன் எடுத்திருக்கின்ற பாரிய முயற்சியினால் அழகான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

இதைத்தான் பேரினவாதிகள் அமைச்சர் றிஷாட் காடுகளை அழிக்கின்றார் என்று பொய்யான வதந்திகளைப் பரப்பி குழப்பத்தை ஏற்படுத்தி அமைச்சரின் நல்ல பணிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகின்றார்கள். இந்தப் பிரதேசத்திலே 1817ஆம் ஆண்டு காலப்பகுதியிலே குடியேறியிருக்கின்றார்கள்.யுத்தம் ஏற்பட்டதும் அங்கு வாழ்ந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தப்பிரதேசத்திலே மக்கள் வாழ்ந்த தடயங்கள், பள்ளிவாசல்,வாழ்விடங்கள் அப்படியே இருக்கத்தக்கதாக வன ஜீவராசிகள் திணைக்களம் இந்தப்பிரதேசத்தை விம்பத்து தேசிய பூங்கா என மாற்றி இராணுவ முகாம்களோடு ஆட்சி செய்து வருகின்றது. இந்த விடயம் பற்றி தவியாக கட்டுரை எழுத இருப்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்தப் பிரதேசங்களை எமது ஊடகக் குழுவினர் அலசி ஆராய்ந்து அறிந்து கொண்டு அங்கிருந்து திரும்பி மீண்டும் திருகோணமலை வழியாக வந்து இரவு 12.00மணியளவில் எங்கள் இல்லங்களை அடைந்தோம்.பயணம் திருப்திகரமாக இருந்தாலும் மூன்று நாட்கள் என்பது தகவல்களை தேடிக்கொள்ள போதாததாக இருந்தது.

இந்தப்பயணத்தின் போது எங்களுக்கு ஆதரவு வழங்கி எங்களை உபசரித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசாங்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அரசியலமைப்பு

(நேற்றைய தொடர்ச்சி....)

ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு, சட்டத்தின்கீழ் செயற்படும் பிரித்து மற்றும் வரையறுக்கப்பட்ட தத்துவங்களையும் அரசாங்கமொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. பாரிய முழுமையான வழிமுறைகள் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்தத்துவங்கள், நாடுகளுக்கிடையிலான ஆள்புல அதிகாரப்பரவல், வர்த்தக உறுப்புரை, attainder மற்றும் நட்டசாடு இன்றிய பெறுகைகள் ஆகியன தொடர்பான சட்டமூலங்கள் மீதான தடை, செயன்முறையில் உள்ள மற்றும் சமமான பாதுகாப்பு பற்றிய உறுப்புரைகள், பிரதிபலிக்கும் தத்துவத்தை உட்படுத்துதல், நீதித்துறையின் சுயாதீனம் - ஆகியன எழுந்தமான அரசாங்கத்தை நேரடியாக அல்லது மறைமுகமாக தடுப்பதை நோக்கமாகக் கொண்டதுடன் மரபுரீதியான முறையில் சட்ட ஆட்சியை ஊக்குவிப்பதற்குமாகும். இந்நோக்கம் சமஷ்டிவாதிகளின் ஆய்வுக் கட்டுரைகளின் செய்திகளுடன் தெளிவான ஏகவினத் தன்மையைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் சொற்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடியதாயிருப்பது எவ்வாறெனில் அத்தகைய நியாயமான அரசாங்க மாதிரியுருவைத் தாபிப்பது போன்றதாகும். எனவே, அதன் ஆரம்பத்திலிருந்து சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் மிக முக்கியமான நீதிச்செயல் ஆகியவற்றினால் அரசியலமைப்பின் பிரிவுகள் மற்றும் வரையறைகள் பொதியளவிற்கு மழுங்கடிக்கப்பட்டுள்ளன. நீதிசார் முறையில் அங்கீகரிக்கப்பட்ட பொதிலும், நிறைவேற்றுக் கிளைக்குரிய மேலதிக சட்டவாக்க தத்துவங்களின் பிரதிநிதித்துவத்திற்கு எதிரான ஆட்சியானது அடிக்கடி வலுவூட்டப்படாது. அரசாங்கத்திற்கு எழுந்தமான தத்துவத்தை உருவாக்கும் சிறந்த வழிமுறையாக அமைந்துள்ளது. வர்த்தக உறுப்புரையானது, நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொதிலும் 1995 Lopex என்பவரின் தீர்ப்பின் பிரகாரம் பொருளாதாத்தை மாத்திரமன்றி வேறேதும் விடயத்தையும் ஒழுங்குபடுத்தும் தத்துவத்தின் பொது மூலமாக (Source) வும் அது அமைந்தது. பொது நலன்புரி உறுப்புரையானது, வரியிடல் மற்றும் செலவினங்களுக்கான பொது நலன்புரிச் சோதனையாக அமுல்படுத்தப்பட்டதுடன் செல்வத்தை மீள பகிர்ந்தளிப்பதற்கான பட்டயமாகவும் உரிமை கோரப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் வரையறையுடனான பிரிக்கப்பட்ட தத்துவ மாதிரியுருவினால் கவரப்பட்ட அவுஸ்திரேலிய அரசியலமைப்பானது, பாராளுமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் பிடிகளில் சிக்கி அதே விளைவுகளை எதிர்நோக்கியுள்ளது.

நீதிமன்று சட்டவாக்க தத்துவத்தின் பிரதிநிதித்துவத்திற்கு எதிரான ஆட்சியை முழுமையாக அழித்தொழித்துள்ள தோடு, ad hominem சட்டவாக்கத்தை அனுமதித்து சுதந்திர வர்த்தகம் எனும் உறுப்புரையை வலுவிழக்கச் செய்து கைத்தொழில் தொடர்புகள் எனும் உறுப்புரையை விரிவுபடுத்தி 'நியாயமான ஊதியம்' தீர்மானித்தல் தொடர்பில் நியாயசபைகளுக்கு அனுமதியளித்ததோடு பொதுவாக தொழிற்சந்தையை ஒழுங்குபடுத்தி மாநில மட்டத்தில் சமிப்புத்தன்மையுடைய தேர்தல் தொகுதி எல்லைகளை மாற்றியமைத்து பொதுநலவாயத் தத்துவங்களின் விரிவான பொருள்கோடல் மூலமாக சமஷ்டிக் கட்டமைப்பை நலிவுறச் செய்துள்ளது. (Ratnapala 2002: Ratnapala & Cooray 1986)

ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளைப் போன்று சட்டவாக்கம் மற்றும் தேர்தல் தொகுதிவாரித்தத்துவம் ஆகிய இரண்டையுமுடைய மீயுயர் சட்டவாக்க நிறுவனங்களிலுள்ள நெகிழ்வுத்தன்மையான அரசியலமைப்புக ளுடனான நாடுகள் உத்தியோகபூர்வ அரசியலமைப்பை உறுதிப்படுத்தும் பிரச்சினை தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்குகின்றன. ஐக்கிய இராச்சிய அரசியலமைப்பு மரபுரீதியானது. ஆனால் பாராளுமன்றத் தத்துவங்களின் வரையறைகள் தெளிவற்று உள்ளன. ஐரோப்பிய சங்கச் சட்டத்தை அவதானிப்பதற்கான உடன்படிக்கைக் கடப்பாடுகள் பிரித்தானியாவிற்கு இருந்த போதிலும் பிரித்தானிய அரசியலமைப்புச் சட்டத்தரணிகள் (சட்ட ரீதியாகப் பேசுகையில்) அதன் தத்துவங்கள் வரையறையற்றவையாக உள்ளன என பரிசீலிக்கும் போக்கை உடையவர்கள். இந்த வரையறைகள் காணப்பட்டமைக்கான காரணம் என்னவெனில், பிரதம நீதியரசர் Coke என்பவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதிலிருந்து பொருள்கோடல் மூலமாக அடக்குமுறையான சட்டங்களின் தன்மையை அவர்கள் அடிக்கடி குறைத்தபோதிலும் பாராளுமன்ற சட்டமொன்றை செல்லுபடியற்றதாக்குவதற்கான தத்துவத்தை அவர்கள் ஒருபோதும் கோரவில்லை. நியூசிலாந்து அரசியலமைப்புச் சட்டமானது அதன் பாராளுமன்றத்தில் சிக்கலற்றதொரு பெரும்பான்மை வாக்குகளால் மாற்றியமைக்கப்படலாம். ஏனைய அநேக நாடுகளில் பொதுவாக உள்ள 2/3 அறுதிப்பெரும்பான்மையாகிய அதிவிசேட பெரும்பான்மையால் சட்டவாக்க மன்று (பாராளுமன்றம்) அரசியலமைப்பை மாற்றியமைக்கலாம். மலேசியா, சிங்கப்பூர் மற்றும் சிம்பாவே ஆகிய நாடுகளில் அரசாங்கங்கள் 2/3 அறுதிப் பெரும்பான்மையை அனுபவித்து வருவதோடு அவர்களின் அரசியலமைவுகளை விருப்பத்தின் பேரில் மாற்றியமைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

நெகிழ்வுத்தன்மையுடைய அரசியலமைப்புகள் உள்ள நாடுகளில், அரசியல் கலாசாரம் கமத்துவம் எழுத்துமூலமற்ற நிர்ப்பந்தங்களினால் பாரிய அளவிற்கு அரசியலமைப்பு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியா மற்றும் சிம்பாவே தமது 2/3 அறுதிப் பெரும்பான்மைகளினால் தமது அரசியலமைப்புகளில் அடிக்கடி மாற்றத்தை ஏற்படுத்தி அதிகாரம் மீதுள்ள தமது பிடிமானத்தை நீடித்துள்ளனர். மாறாக, அதிகளவு தேர்தல் தொகுதி அதிகாரங்களை கொண்டுள்ள பாராளுமன்றங்கள் உள்ள பிரித்தானிய மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில், அரசாங்கத்தின் மீது அரசியல் கலாசாரம் நிர்ப்பந்திக்கும் நடைமுறை வரையறைகளினால் அவர்களின் அதிகாரத்தை அதிகரிப்பதற்கென ஒவ்வொரு அரசாங்கங்களின் முயற்சிகள் கைகூடவில்லை.

(தொடரும்)

வாக்குளை விட மக்கள் நலனுக்காகவே மக்கள் காங்கிரஸ் பாடுபடுகிறது

அம்பாறை முக்கியஸ்தர்களுடனான சந்திப்பில் அமைச்சர் றிஷாட்

(சுஜீப்.எம்.காசிம்.பி.எம்.எம்.ஏ. காதர்)

வாக்குகளை எதிர்பார்த்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அரசியலை மேற்கொள்ளவில்லை என்றும் மக்களின் நலனை மையமாக வைத்தே தமது கட்சி பணிபுரிந்து வருவதாகவும் அக்கட்சியின் தலைவர்- அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெளிவு படக்கூறினார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளின் கட்சியின் முக்கியஸ்தர்கள் , ஆதரவாளர்களுடனான சந்திப்பு மட்டக்களப்பில் இடம்பெற்ற போது அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கட்சியின் தவிசாளர் ,பிரதியமைச்சர் அமீர் அலி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட கட்சியின் அமைப்பாளர்களான கலாநிதி ஜமீல், சிராஸ் மீரா லாஹிப்,முன்னாள் உப வேந்தர் இஸ்மாயில், முன்னாள் எம்.பி அப்துல் மஜீத், சிரேஷ்ட ஊடகவியாளர் ஏ.அர்.எம். ஜிப்ரி. உட்பட மத்தியகுழு உறுப்பினர்கள், வட்டாரக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்று தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட்டனர். மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களான செயலாளர் சுபைதீன், எம்,பிக்களான அப்துல்லா மஹ்ரூப், இஷாக் ரஹ்மான் ,டாக்டர். அனீஸ் டாக்டர் ஷாபி, முத்து முகம்மது, அலிக்கான் ஷரீப், அகியோர் உட்பட பலர் பங்கேற்று இருந்தனர். மக்கள் காங்கிரஸை ஆரம்பித்து நீண்டகாலங்களின் பின்னரே அம்பாறை மாவட்டத்துக்குள் அரசியல் செய்வதற்காக ஊடுருவினோம் எவரையும் வீழ்த்த வேண்டும் என்பதற்காகவோ, எந்தக் கட்சிக்கும் சவாலாக இருந்து அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காகவோ நாம் இந்த மாவட்டத்திற்குள் நுழைய வில்லை.

மக்கள் காங்கிரஸின் செயற்பாடுகளில் நாக்கப்பட்டவர்களும் நீண்டகாலமாக எமது பணிகளை தூரத்தில் நின்று அவதானித்தவர்களும் வேறு கட்சிகளுக்கு வாக்களித்து வாக்களித்து ஏமாற்றப்பட்டவர்களும் எம்மை இந்த மாவட்டத்துக்கு வந்து அரசியல் செய்யுமாறு கடந்த பொதுத்தேர்தல் காலத்திலே எம்மை அன்புடன் கோரியதனாலேயே மயில் சின்னத்தில் தனியாக களம் இறங்கினோம். அந்தத் தேர்தலில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் எட்டாக்கனியாகிய போதும் ,இந்தப்பிரதேசத்தில் ஒரு பாதையேனும் நாங்கள் புனரமைக்காது பெற்றுக்கொண்ட 33ஆயிரம் வாக்குகளை பெறுமதியானதாகவே கருதுகின்றோம் அந்த வேளையில் எமதுகட்சிக்கு என இங்கு ஒரு தனியான, சிறப்பான எந்த கட்டமைப்பு இல்லாத நிலையிலும் கூட நீங்கள், உங்களையே உருக்கி இந்த வாக்குகளை பெற்று தந்தீர்கள்.

தேர்தல் காலத்தில் நாம் கொடுத்த வாக்குறுதிகளை ஒரு போதும் மீற மாட்டோம். தேர்தலின் பின்னர் இந்த பிரதேசத்தின் அபிவிருத்தியில் நாம் அக்கறைகாட்டி வருகிறோம். எனினும் தமது அரசியல் இருப்பு பாதிக்கப்படும் என்ற பயத்தில் இங்கிருக்கும் அதிகாரம் பெற்ற அரியல்வாதிகள் நாம் மேற்கொள்ள முனைகின்ற திட்டங்களை தடுப்பதில் குறியாய் இருக்கின்றனர். சில முயற்சிகள் கைகூடி வந்த பின்னர் அதனை முடக்கியும் உள்ளனர்.

எத்தனை தடைகள் வந்தாலும் மக்களின் உதவியுடன் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்து இந்த பிரதேச மக்களின் வாழ்வியல் துன்பங்களுக்கு முடிந்தவரையில், இறைவன் உதவியால் விடிவு பெற்று கொடுக்க நாம் உறுதிபூண்டுள்ளோம்.

அபிவிருத்தி ஒருபுறம் இருக்கட்டும், இந்த பிரதேசமக்களின் வாக்குகளை பெற்று அரசியல் அதிகாரத்தை தந்திரோபாயமாக தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டு மக்களின் நலனில் அக்கறை காட்டாமல் தூங்கிக் கொண்டு இருந்தவர்களை, எமது கட்சியின் இந்த பிரந்திய வருகை தட்டி எழுப்பி,இங்கு அடிக்கடி ஓடிவர செய்துள்ளது. பிதியடைய செய்துள்ளது அதனால் அவர்கள் உங்களை நாடி வர வழி ஏற்பட்டுள்ளது.

இது எமது கட்சிக்கு இந்த பிரதேசத்தில் கிடைத்த வெற்றியாகவும் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகவுமே நாம் பார்க்கின்றோம்.

மக்களுக்காகவே கட்சி இருக்க வேண்டும் மக்களின் நலன்களையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காகவே கட்சி முக்கியஸ்தர்கள் இயங்கவேண்டும். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இந்த விடயத்தில் கண்டிப்பாகவே இருக்கும் எனவும் அமைச்சர் கூறினார்.

கண்டியில் 9,212 பேர் வரட்சியால் பெரிதும் பாதிப்பு

(வத்துகாமம் நிருபர், மொஹமட் ஆஸிக்)

கண்டி மாவட்டத்தில் வரட்சி காரணமாக பெப்ரவரி மாதம் வரை 9,212 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக நிலவி வந்த கடும் வரட்சி காரணமாக மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகப் பிரிவில் 2,556 குடும்பங்களைச் சேர்ந்த 9,212 பேர் பெப்ரவரி மாதம் வரை பாதிப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான நிவாரணங்களை செய்து கொடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட அலுவலகம் தெரிவிக்கின்றது. கண்டி மாவட்டத்தில், யட்டிநுவர பிரதேச செயலக பிரிவில் 273 குடும்பங்களை சேர்ந்த 1260 பேரும், அக்குறணை பிரதேச செயலக பிரிவில் 490 குடும்பங்களை சேர்ந்த 1100 பேரும், கலகெதரை பிரதேச செயலக பிரிவில் 155 குடும்பங்களைச் சேர்ந்த 597 பேரும் கங்க இஹகோரலய பிரதேச செயலகப் பிரிவில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 439 பேரும் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலக பிரிவில் 656 குடும்பங்களைச் சேர்ந்த 2478 பேரும் பாதிக்கப்படுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவிக்கின்றது.

இருந்த போதும் கண்டி மாவட்டத்தில் தற்போது மழை ஆரம்பித்துள்ளதால் நிலைமை சீராகும் என்று நம்புவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவிக்கின்றது.

பிள்ளையான் 33ஆவது முறையாக விளக்கமறியலில்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பேரினதும் விளக்கமறியல் மார்ச் மாதம் 20ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் திங்களன்று சந்தேக நபர்களை ஆஜர்படுத்தியபோதே, நீதவான் இவர்களுக்கான விளக்கமறியலை நீடித்துள்ளார். 33 ஆவது முறையாக இந்த நீடிப்பு வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையான், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

312 நபர்களின் 13 ஏக்கர் காணி தனி நபரால் சுவீகரிப்பு

பொலிஸில் முறைப்பாடு

(காத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கர்பலா கிராமத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த சுமார் 312 நபர்களின் 13 ஏக்கர் காணியை தனிநபர் ஒருவர் சுவீகரித்துள்ளார் என காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தாங்கள் முறைப்பாடு செய்துள்ளதாக குறித்த கர்பலா காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கர்பலா கிராமத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் காணி உரிமையாளர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

2004ஆம் ஆண்டு தாங்கள் இந்த காணிகளை வாங்கினோம் காலத்திற்கு காலம் கணமிக்கு பிறகு உரிய முறையில் கட்டை போட்டு எல்லை போட்டு அடைத்தோம்.

ஆனால் கடந்த 3 மாதங்களுக்கு முதல் இந்த காணிகளின் கட்டைகளை பெக்கோ போட்டு தள்ளிவிட்டு ஒரு சில அரசியல் வாதிகளுடைய அடி வருடிகள் காணிகளை பிடித்திருப்பதாக அறிகிறோம். ஆகவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் எடுத்து எந்த ஒரு பாரபட்சமும் பார்க்காது கேப்பாப்புலவு,யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் சொந்தக் காணிகளை அந்தந்த மக்களுக்கு கொடுப்பது போல் இந்தக் காணிகளையும் உரிய மக்களுக்கு பெற்றுத்தர வேண்டும்.

காத்தான்குடி பிரதேசதம் சன அடர்த்தியான பிரதேசமாக காணப்படுவதால் அந்தப் பிரதேசத்தில் இருந்து இந்த பிரதேசங்களுக்கு வந்து குடியேற வேண்டிய தேவை காணப்படுகின்றது.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து 5,6 தினங்கள் கடந்த போதிலும் எந்த நீதியான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.ஆகவே உரிய நடவடிக்கைகளை ஒவ்வொரு தரப்பும் செய்வதோடு ,பிரதேச சபை,பிரதேச செயலகம் போன்றவை தயவு செய்து தங்களுடைய காணிகளை தருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காணியை 310 குடும்பங்களைச் சேர்ந்த காத்தான்குடி மக்கள் வாங்கி இருக்கின்றார்கள். ஆரையம்பதி பிரதேச சபை மற்றும் செயலகத்தில் எந்தத் தொடர்பும் இல்லாமல் அவர்களின் சுய விருப்பத்தின் பேரில் அவர்களின் அரியியல் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து சட்ட விரோதமாக 312 ஏழை மக்களுடைய காணிகளை குறித்த நபர் அடைத்துள்ளதாகவும்,அவரே காணிக்கு உரிமை கோருவதாகவும் பொலிஸார் தெரிவித்ததற்கமைய 70- 80இற்கு இடைப்பட்ட காணி உரிமையாளர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளர். எங்களுடைய காணிகள் முன்னர் இருந்து போன்று விடுவிக்க வேண்டும் இல்லாவிட்டால் நாங்கள் நிம்மன்றம் சென்று வழக்கு தொடர தயாராகவுள்ளதாகவும் காணி உரிமையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

ஸ்மார்ட் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் ஜப்பானிய அபகஸ் நுண் அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு மருதானை டவர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை(04) நடைபெற்றபோது விசேட அதிதி புரவலர் ஹாசிம் உமர் மாணவி ஒருவருக்கு விருது வழங்குவதையும் பிரதம அதிதி கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் மற்றும் பொன்மனச்செல்வி கௌசலாயாதேவி, கலைஞர் கலைச்செல்வன் ஆகியோர்களையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படம் - ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)

விளக்கமறியலில் உள்ளோரைப் பார்ப்போருக்கு கட்டுப்பாடா?

அஸ்வர் கேள்வி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

விளக்கமறியலில் உள்ளவர்களை காணச் செல்வதனைத் தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச். எம். அஸ்வர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது,

ஆண்டாண்டு காலமாக உள்ள முறைக்கும் ஏனைய நாடுஇலுள்ள நடைமுறைக்கும் இணங்க விளக்கமறியலில் உள்ளவர்களைப் பார்ப்பது சம்பந்தமாக அவர்களுடைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுமதி வழங்குவது வழக்கமாக இருந்து வந்தது. இப்போது ஏராளமானவர்கள் விளக்கமறியலில் உள்ளவர்களை காணச் செல்லுகின்றமையினால் அதன் மூலமாக அங்குள்ளவர்களின் மனம் மாறி அரசாங்கத்திற்கு மாறிச் செல்வார்கள் என்ற அச்சத்தின் காரணமாக தற்காலிக சிறையில் உள்ளவர்களை காண்பதற்கு தடைசெய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இது பெரும் அராஜகச் செயலாகும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டுள்ள மிகவும் அநாகரிகமான, அமானிச, இன விரோத சக்திகளுக்கு ஒப்ப இந்த நாட்டிலும் விடயங்கள் நடைபெறுகின்றனவா? என்ற கேள்வியை நாங்கள் எழுப்ப வேண்டியிருக்கின்றது. எனவே இவைகளை விட்டு விட்டு அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் ஏராளம். ஏராளம் அவைகளைத் தீர்ப்பதற்கு அரசிடம் இருந்து உத்தரவாதங்களைப் பெறுமாறு முஸ்லிம் முற்போக்கு முன்னணி வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றது.

90 வீதமான முஸ்லிம்கள் வாக்களித்தார்கள் என்று கூறுவார்களானால் ஏன் இந்த அங்கலாய்ப்பு? ஏன் இந்த அழுகைக்குரல்? மௌலவி ஆசிரியர் நியமனம், மாணிக்கக் கல் வியாபாரம் முதல் வீதியிலே அங்காடி வியாபாரம் செய்கின்ற சாதாரண முஸ்லிம் வியாபாரிகள் வரை எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், ஒட்டோ சாரதிகள் போன்ற இன்னோரன்ன பொதுமக்கள் பலவாறும் கஷ்டத்துக்கும் துன்பத்துக்கும் ஆளாகி இருப்பது ஏன்? என்ற கேள்விகளையும் அவர் எழுப்பியுள்ளார்.

முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட மாநாடு

முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

(அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டுக்கான முன்னணியின் செயற்திட்டங்களை முன்வைத்தல்,2017 ஆண்டின் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதல் மற்றும் அறிமுகம் செய்தல், வசதி குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

முன்னணியின் மாவட்டத் தலைவரும் மேற்பார்வை பொதுச் கூகாதர பரிசோதகருமான எம்.எஸ்.எம்.அப்துல் மலிக் தலைமையிலும் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மல்வத்தை தெட்டாச் கருங்கி விவசாயப் பிரதேசத்தில் கடந்த யுத்த கால சூழ்நிலையின் போது இடம்பெயர்ந்த நிலையில் தற்போது பெரும்பான்மையினரால் அபகரிக்கப்பட்டு காணிகளை இழந்துள்ள 58 தமிழ்,முஸ்லிம் விவசாயிகளின் காணிப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் முன்னணியின் முன்னாள் தேசியத் தலைவரும் காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் ஆலோசகருமான எம்.ஐ. உதுமாலெவ்வை தலைமையிலும் சம்மாந்துறை அல் மர்ஜான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களை இனம் கண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி கல்வி கற்றலை ஊக்குவித்தல், முன்னணியினால் நடாத்தப்படுகின்ற முன்பள்ளி பாலர் பாடசாலை மற்றும் குர்ஆன் மத்ரசா மாணவர்களுக்கான விடுகை விழாவினை நடாத்தி அவர்களை ஊக்குவித்தல், பின்தங்கிய பிரதேசங்களில் பாலர் பாடசாலை மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களை ஆரம்பித்தல், மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடல், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வகுப்புக்களை நடாத்துதல், அம்பாறை மாவட்டத்தில் காணிகளை இழந்துள்ள விவசாயிகளின் காணிப்பிரச்சினை தொடர்பான விடயங்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் போன்ற பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட கமக்கார அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர், மற்றும் முன்னணியின் மாவட்ட உறுப்பினர்கள்.

ஆலோசகர்கள், மனித எழுச்சி நிறுவனமற்றும் காணி உரிமைக்கான செயலணியின் உறுப்பினர்கள், மல்வத்தை தொட்டாச் சுருங்கி விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

படை பரிவாரங்களுடன் பாலித் தீவில் 'கிங்' சல்மான்

உலகின் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு இந்தோனேஷியா. தென்கிழக்காசிய நாடான இந்தோனேஷியாவில் மக்கள் தொகை கிட்டத்தட்ட 26 கோடி. பெரும்பான்மையான மக்கள் இஸ்லாமியர்கள். சவூதி அரேபியா போலவே இஸ்லாமிய சட்டதிட்டங்களை முறைப்படி பின்பற்றும் நாடு இந்தோனேஷியா. இந் நாட்டுக்கு சவூதி மன்னர் சல்மான் அரசுமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த 46 ஆண்டுகளில் இந்தோனேஷியாவுக்கு சவூதி மன்னர் ஒருவர் சுற்றுப்பயணம் மேற்கொள்வது இதுவே முதன்முறை.

சுற்றுப்பயணம்தானே என சாதாரணமாக நினைத்துவிட வேண்டாம். மன்னருடன் 25 இளவரசர்கள், 10 அமைச்சர்கள், 100 பாதுகாப்பு அதிகாரிகள் என மொத்தம்1,500 பரிவாரங்கள் இந்தோனேஷியாவுக்கு சென்றிருக்கின்றனர். குண்டு துளைக்காத 'மெர்சிடீஸ் பென்ஸ் எஸ்-600' ரக கார்கள் இரண்டும் ஜகர்தாவுக்கு முன்னதாகவே கொண்டு செல்லப்பட்டன. மொத்தம் 506 டொன் பொருட்கள் மன்னருடன் இந்தோனேஷியாவுக்குச் சென்றடைந்துள்ளன. மன்னர் சல்மானின் பிரத்யேக 747 போயிங் ஜெட் உட்பட 3 விமானங்கள் ரியாத்திலிருந்து ஜகர்தாவுக்கு சென்றுள்ளன. அதில் இரு விமானங்கள் நிறைய பொருள்கள் இருந்தன. மன்னர் உணவு அருந்தும் 'பிளேட்' கூட அவர் அரண்மனையிலிருந்தே கொண்டு வரப்பட்டுள்ளது. சவூதி மன்னர் கொண்டு வந்த பொருட்களை இறக்கவே 572 ஊழியர்கள் தேவைப்பட்டுள்ளனர்.

இதற்குமுன் கடந்த 2015ஆம் ஆண்டு சல்மான் அமெரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, வொஷிங்டன் ஜோர்ஜ்டவுனிலுள்ள ஃபோர் சீசன்ஸ் ஹோட்டலில் தங்கினார். அந்த ஹோட்டலிலிருந்த 222 அறைகளும் சல்மானுக்காக 'புக்' செய்யப்பட்டிருந்தன. வொஷிங்டனிலுள்ள ஹோட்டல்களிலேயே போர் சீசனில்தான் விலை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகிலேயே அதிக நபர்கள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வது சவூதி மன்னர்களும் அமெரிக்க ஜனாதிபதிகளும் மட்டுமே. கடந்த 2013ஆம் ஆண்டு சௌதல் மற்றும் தன்சானியா நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சுற்றுப்பயணம் சென்றார். அப்போது, 14 உயர் ரக வாகனங்கள் உட்பட மொத்தம் 56 வாகனங்கள் அந்த நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. கடந்த 2014இல் பெல்ஜியத்துக்கு ஒபாமா சென்ற போது அவருடன் 900 பேர் சென்றிருந்தனர். விலை உயர்ந்த வாகனங்கள் உட்பட 45 வாகனங்களும் அமெரிக்காவிலிருந்து பிரஸ்ஸல்ஸுக்கு முன்னதாகவே அனுப்பி வைக்கப்பட்டன. அதனை சவூதி மன்னர் முறியடித்துள்ளார்.

தற்போது 81 வயதான மன்னர் சல்மான், இந்தோனேஷிய முன்னாள் ஜனாதிபதி மேகவதி சுகர்ணபுத்ரி, அவரது மகளும் இந்தோனேஷிய அமைச்சருமான பூவான் மகாராணி ஆகியோருடன் 'செல்ஃபி' எடுத்துக் கொண்டார். அதில் சுகர்ணபுத்ரி, சல்மான், இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோவா ஆகியோர் உள்ளனர். இந்த செல்ஃபி இணையத்தில் தற்போது வைரலாகியுள்ளது. இதனை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பகிர்ந்துள்ளனர்.

ஜகர்தா அருகே போகார் என்ற இடத்திலுள்ள இந்தோனேஷிய ஜனாதிபதியின் மாளிகையில் சவூதி மன்னருக்கு விருந்து ளிக்கப்பட்டது. விருந்துக்கு முன்னதாக, வீடியோ ஒன்றை வெளியிட்டார் கிங் சல்மான். "இந்தோனேஷியாவில் இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு அனைத்து மதத்தினரும் ஒற்றுமையுடன் இருப்பதைப் பார்த்து பெருமிதப்படுகிறேன்" என்றார் சல்மான். அவர் தற்போது புகழ்பெற்ற பாலி தீவில் ஓய்வெடுத்து வருகிறார்.

15 ஆயிரம் இளவரசர் - இளவரசிகள்: செலவு எவ்வளவு தெரியுமா?

மன்னராட்சிக்குப் புகழ்பெற்ற சவூதி அரேபியா, ஆசியாவில் ஐந்தாவது பெரிய நாடு. இந்த நாட்டில் கடந்த 1938ஆம் ஆண்டில் பெற்றோல் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதிருந்தே செல்வத்தில் கொழிக்கத் தொடங்கியது சவூதி. நாட்டின் முதல் மன்னர் அப்துல் அஸீஸ். கிங் அப்துல் அஸீஸ் என பலரால் அழைக்கப்பட்டவர். பெற்றோலிய வளத்தை முறையாகப் பயன்படுத்தி சவூதி அரேபியாவை வளம் கொழிக்கும் நாடாக மாற்ற விரும்பினவர் இவர்தான். இரண்டாம் உலகப் போரின் போது, உலகம் முழுக்க பெற்றோலின் தேவை அதிகமாக, அதைப் பயன்படுத்தி பாலைவனத் தேசத்தை பணக்கார பூமியாக மாற்றினார் கிங் அப்துல் அஸீஸ். இவருக்கு மட்டும் 17 மனைவிகள் வழியாக 36 குழந்தைகள் உண்டு. இப்படிதான் சவூதி அரேபியாவின் மன்னர் குடும்பம் உருவாகத் தொடங்கியது.

சவுதியின் இரண்டாம் அரசரான கிங் சாத்துக்கு (கிங் அப்துல் அஸீஸின் மகன்) மகன்கள் மட்டும் 53 பேர். ஆயிரக்கணக்கில் உறவினர்கள். சவூதி அரேபிய மன்னர் குடும்பம் பற்றி, ஜோசப் ஏ. கெல்லியன், 'சவூதி அரசமைப்பு வரலாறு' என்ற புத்தகத்தில் சவூதி அரேபியாவில் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் இளவரசர், இளவரசிகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார். கிங் சாத்தின் மகன், இளவரசி பாஸ்மா பின் சாத், ரோயல் நம்பர் 15000 எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சவூதியைப் பொறுத்தவரை 13 மாகாணங்கள் உள்ளன. அதனை நிர்வகிக்கும் உரிமைகள் பெரும்பாலும் முத்த இளவரசர்கள் கையில் ஒப்படைக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளிலும் முத்த இளவரசர்களே நியமிக்கப்படுகிறார்கள். சவூதி அரேபியாவின் மறைந்த மன்னர், அப்துல்லா 1963ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை தேசிய பாதுகாப்புப் படைத் தலைவராக இருந்தவர் தான். பின்னர் மன்னராகப் பொறுப்பேற்ற பின்னர்தான் அந்தப் பதவியைத் துறந்தார்.

தற்போது இந்த நாட்டின் மன்னராக கிங் சல்மான் இருக்கிறார். கிங் சல்மான், கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்துள்ளார். மன்னர் அப்துல் அஸீஸின் 25ஆவது குழந்தை சல்மான். இவரது தாய், ஹசா அல் சுதாரிதான் கிங் அப்துல் அஸீஸின் நேசத்துக்குரியவர். கிங் அப்துல் அஸீஸ் - ஹசா அல் சுதாரிக்கு இடையே 7 குழந்தைகள் உண்டு. கிங் சல்மான், சவூதியின் பாரம்பரியமான உடை அணிந்தாலும் இளம் பருவத்தில் மேற்கத்திய உடைகளை விரும்பி அணிவாராம். கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் ரியாத் மாகாண ஆளுநராக இருந்திருக்கிறார். இவரது காலத்தில்தான் ரியாத் நகரை ஒட்டிய பாலைவனங்களில் பிரமாண்டமான வானளவு உயர்ந்த கட்டங்கள் எழுப்பப்பட்டு மக்கள் வசிக்குமளவுக்கு புறநகர் பகுதியாக உருவாக்கப்பட்டது.

தற்போது நாட்டில் மொத்தம் 15 ஆயிரம் இளவரசர் - இளவரசிகள் இருக்கின்றனர். இராஜ குடும்பத்துக்கு இப்போது கிங் சல்மான்தான் தலைவர். தற்போது சவூதியே பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. ஏராளமான வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் கட்டுமான நிறுவனங்கள் அவர்களைத் திருப்பி அனுப்பி வருகின்றன. இதற்கிடையே சவூதி அரச குடும்பத்தினர் சுகபோக வாழ்க்கையில் வாழ்வதாக வெளிநாட்டு ஊடகங்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

அரச குடும்பத்தினர் சுவிஸ் வங்கியில் பணம் போடுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் ஆடம்பரப் படகுகளில் உல்லாசமாக வலம் வருகின்றனர் என்ற செய்திகளைப் பார்க்க முடிகிறது. கிங் சல்மான் பெயர் கூட கடந்த ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட பனாமா பேப்பரில் இடம் பெற்றுள்ளது. லக்ஸ்ம்பர்க் மற்றும் பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகளில் நிறுவனங்கள், லண்டனில் சொத்துக்கள், பிரமாண்டமான படகுகள் வைத்திருக்கிறார் என பனாமா பேப்பர் சொல்கிறது.

சவூதியின் முக்கிய எண்ணெய் நிறுவனமான சவூதி அராம்கோ நிறுவனத்தின் ஒட்டு மொத்த வருவாய் முழுவதுமே சவூதி அரசக் குடும்பத்தினர் செலவுக்காகத்தான் ஒதுக்கப்படுவதாக சொல்கிறார்கள். அதாவது தினமும் 10 இலட்சம் பேரல்கள் குருட் ஆயில் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் இளவரசர்கள் - இளவரசிகள் செலவுக்காக ஒதுக்கப்படுகிறதாம். அரசக் குடும்பத்திலும் நேரடி இளவரசர்களுக்கும் உறவு முறையில் வலம் வருபவர்களுக்கும் வழங்கப்படும் படிகள் உள்ளிட்ட விடயங்களில் அநேக வித்தியாசங்கள் இருக்கின்றன. நேரடி உறவுகளுக்கும் மறைமுக உறவுகளுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால்... நேரடி உறவுகள் எம்பொஸி, புகாட்டி ரக கார்களில் வந்தால், மறைமுக உறவுகள் ரேஞ்ச் ரோவர், மெர்சிடெஸ் பென்ஸ் கார்களில் வருவார்கள்.

அரசரின் நேரடி மகனுக்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் மாதம் ஒன்றுக்கு செலவுக்காக வழங்கப்படும். பேரக்குழந்தைகளுக்கு மாதம் 8 ஆயிரம் டொலர்கள் கிடைக்கும். அரச வாரிசுகளுக்குத் திருமணம் நடந்தால் 3 மில்லியன் டொலர்கள் வரை அரண்மனை கட்டிக் கொள்ள திருமணப் பரிசாக வழங்கப்படும். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல் இது.

சவூதி அரேபியாவின் மொத்த பட்ஜெட் 40 பில்லியன் அமெரிக்க டொலர்கள். அதில், 2 பில்லியன் டொலர்கள் அரச குடும்பத்தின் செலவுகளுக்காக ஒதுக்கப்படுகிறது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிலும் முன்னுரிமை. அரசு துறைகளில் நல்ல பணிகள் ஒதுக்கப்படும், நிர்வாக ரீதியிலான பதவிகள் வழங்கப்படும். எண்ணெய் நிறுவனங்களில் கௌரவத் தலைவர்கள் பதவியில் இருப்பார்கள். அதிலிருந்து படிகள் கிடைக்கும். மற்றபடி தொலைபேசி கட்டணத்திலிருந்து சவூதி ஏர்லைன்சில் நினைத்த நேரம் பயணம் செய்யும் வசதி வரை உண்டு.

தகவல்களுக்கு மறுப்பு

ஆனால் இந்தத் தகவல்களை சவூதி அரசின் செய்தித் தொடர்பாளர் குவாசேயர் மறுக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில்,

"மன்னர் குடும்பத்துக்கு மட்டுமே ஆண்டுக்கு 2.7 பில்லியன் டொலர்கள் செலவாகின்றன என சொல்லப்படுவது தவறானது. சவூதியின் அரச பரம்பரையின் அமைப்பைத் தெரிந்தவர்களுக்கு அதனை விளக்கத் தேவையில்லை. நாட்டின் பல மாகாணங்களில் பூர்வீகக் குடிகள் உள்ளனர். அந்த பூர்வீகக்குடித் தலைவர்களுக்கு பெரும் தொகை போய் சேர்கிறது'' எனக் கூறியுள்ளார்.

தற்போதைய சவூதி மன்னர் சல்மான் செலவுகளைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார். அமைச்சர்கள் சம்பளத்தில் 20 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. மன்னரால் நியமிக்கப்படும் சவுரா கவுன்சில் உறுப்பினர்களின் சம்பளத்தில் 15 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. வழங்கப்படும் படிகள் உள்ளிட்ட இதர செலவுகளையும் கட்டுக்குள் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாத்தின் வழியில் சல்மான்!

"பகவின் கன்றை கொன்ற மகனைத் தேர்க் காலில் தலையை இடறச் செய்து, நீதி வழங்கினான் மனுநீதிச் சோழன் என் கிறது வரலாற்று நூல்கள். தற்காலத்திலும் அப்படி ஒரு சம்பவம் சவூதி அரேபியாவில் நடந்துள்ளது. சவூதியில் என்ன குற்றம் செய்தாலும் இஸ்லாமிய முறைப்படித்தான் தண்டனை வழங்கப்படும். கொலைக்குப் பதில் கொலை, கையை வெட்டினால் பதிலுக்கு கை வெட்டப்படும்.

இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோவாவுடனான செல்பி

தற்போது அரேபிய அரசராக இருப்பவர் கிங் சல்மான். சவூதியில் தவித்த ஆயிரக் கணக்கான வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை செட்டில் செய்ய உத்தரவிட்டவர். தீவிரவாதச் செயல்களால் பாதிக்கப்படும் அண்டை நாடுகளுக்கும் உதவி வருபவர். வளைகுடா அரசர்களில் கிங் சல்மான் சற்று வித்தியாசமான மனிதநேய மிக்க அரசராகத்தான் இதுவரை தெரிந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக கொலைக்குற்றத்தில் ஈடுபட்ட தனது பேரனின் தலையை துண்டிக்க உத்தரவிட்டு, உலக மக்களை வியப்படைய வைத்துள்ளார். இத்தனை நாளும் மனித நேய மிக்க மனிதராக தெரிந்த கிங் சல்மானின் பேரர்க்குணத்தைக் கண்டு சவூதி மக்களே மிரண்டு போயினர்.

கடந்த 1935ஆம் ஆண்டு பிறந்த கிங் சல்மான் தனது 19ஆவது வயதில் முதன் முறையாக நிர்வாகப் பொறுப்புக்கு வந்தார். 2015ஆம் ஆண்டு வரை இளவரசராகத்தான் சல்மான் இருந்தார். சல்மானின் சகோதரர் கிங் அப்துல்லா மரணமடைந்த தையடுத்து, தனது 79ஆவது வயதில் சவூதி அரேபியாவின் மன்னராக சல்மான் பதவியேற்றார். பதவியேற்றபோது, "நிருபயது என் மகளாக இருந்தாலும் கையை வெட்டுவேன் என்றார்கள் நபிகள். அதுபோல் குர்ஆனில் என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதே வழியிலான தண்டனைதான் எனது ஆட்சியிலும் தரப்படும். எனது குடும்பத்தினரால் பொதுமக்களுக்கு தொல்லை நேர்ந்தால் சட்டத்தில் என்ன சொல்லப்படுகிறதோ அதே தண்டனைதான் கிடைக்கும்'' என்று அறிவித்திருந்தார்.

கிங் அப்துல்லாவின் நேர்மையை சோதிக்கும் வகையில் கடந்த 2012ஆம் ஆண்டு சவூதியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சவூதி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் இளவரசர் கபீர். நண்பருடன் ஏற்பட்ட தகராறில் அவரைச் கட்டுக் கொன்று விட்டார் கபீர். இதனைத் தொடர்ந்து கபீர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். நீதி விசாரணை நடந்தது. கிங் சல்மான் ஆட்சியில் நீதி விசாரணையில் எந்த குறுக்கீடும் ஏற்படவில்லை. குற்றத்துக்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டு முறையாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கொலைக் குற்றத்துக்கு இஸ்லாத்தில் பதிலுக்கு கொலைதான் தண்டனை என சொல்லப்பட்டுள்ளதால், அதே வழித் தண்டனை இளவரசர் கபீருக்கு வழங்கப்பட்டது.

உறவினர்கள் பலர் மன்னரிடம் முறையிட்டு, கபீரை காப்பாற்ற முயற்சித்தனர். ஆனால், மன்னரிடம் எடுபடவில்லை. மன்னர் மனதை மாற்றிக்கொள்ளவில்லை. எனது பேரனாக இருந்தாலும் அல்லாஹ்வின் சட்டத்தில் சமரசம் செய்து கொள்ள எந்த இடமும் இல்லை" எனக் கூறி தண்டனையை உறுதி செய்தார். இதனைத் தொடர்ந்து ரியாத்தில் இளவரசர் கபீரின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு முன் கடந்த 1975ஆம் ஆண்டு மன்னர் பைசலை கொலை செய்த குற்றத்துக்காக இளவரசர் பைசல் பின் முஸைத் பொது இடத்தில் தலை துண்டித்துக் கொலை செய்யப்பட்டார். இளவரசர் பைசலின் தலை துண்டிக்கப்படுவதை பார்க்க 10 ஆயிரம் பேர் கூடியிருந்ததாகவும் தலை துண்டிக்கப்பட்டதும் "கோட் இஸ் கிரேட்... ஜஸ்டிஸ் டன்" என முழக்கமிட்டதாக நியூயோர்க் டைம்ஸ் அப்போது செய்தி வெளியிட்டிருந்தது. அதனால், அதே பாணியிலிதான் இளவரசர் கபீரின் தலையும் துண்டிக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. ஆனால், இதுதொடர்பாக எந்த புகைப்படமும் சவூதி அரசு சார்பில் வெளியிடப்படவில்லை.

இங்கே இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். பைசல் பின் முஸைத் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரையே கொலை செய்திருந்தார். அதனால் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது பெரிய விடயமே இல்லை. ஆனால், கபீர் கொலை செய்தவர் அரசக் குடும்பத்தைச் சார்ந்தவர் இல்லை. ஆனாலும், மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனது ஆட்சியில் யார் தவறு செய்தாலும் தண்டனையில் வேறுபாடு இருக்காது என்பதை சவூதி மக்களுக்கு உணர்த்தியிருக்கிறார் கிங் சல்மான்.

கடந்த 1932ஆம் ஆண்டு தொடக்கம் 1953ஆம் ஆண்டு வரை சவூதி அரேபியா மன்னராக இருந்தவர் அப்துல் அஸீஸ். இவர்தான் சவூதியின் தொழில் வளர்ச்சிக்கும் செல்வச் செழிப்புக்கும் வித்திட்டவர். கபீர் கிங் சல்மானுக்கு நேரடி பேரன் இல்லையென்றாலும் மறைந்த மன்னர் அப்துல் அஸீஸின் வழியில் தூரத்து உறவாகிறார். நீதியை நிலை நாட்டுவதில் தான் ஒரு 'கிங்' என நிரூபித்து விட்டார் 'கிங்' சல்மான்!

தடையை மீறி வடகொரியா மீண்டும் ஏவுகணை பரிசோதனை

ஜப்பான் கடல் பகுதியில் பெரும் பரபரப்பு; உலக நாடுகள் கடும் கண்டனம்

சர்வதேச நாடுகளின் தடையை மீறி வடகொரியா நேற்று பரிசோதித்த நான்கு ஏவுகணைகளில் மூன்று ஜப்பான் கடல் பகுதியில் விழ்ந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

அந் நாடு தொடர்ந்து மூன்று முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தியுள்ளது. அதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி, அதிரடியாக அணுகுண்டை விட பல மடங்கு சக்தி மிக்க ஹைட்ரஜன் குண்டை வெடித்து சோதித்தது. இதுவும் அணுகுண்டு வகையில்தான் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதன்படி அந்த நாடு கடந்த ஆண்டுவரை நான்கு முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தி உள்ளதாக சர்வதேச நாடுகள் பதிவு செய்துள்ளன.

இதன்காரணமாக, வடகொரியாமீது ஐ.நா. பாதுகாப்பு சபையிலும், அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன. எனினும், தற்காப்பு என்ற பெயரில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை விடாமல் நடத்தி வருகிறது.

இந்த ஏவுகணைகள் அனைத்தும் வடகொரியாவிலிருந்து சுமார் 3400 கிலோமீற்றர் தொலைவில் மேற்கு பசுபிக் பெருங்கடல் பகுதியில் வட அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க கடற்படை தளத்தை தாக்கி அழிக்கும் ஆற்றல் படைத்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டில் கடந்த செப்டம்பர் மாதம்வரை ஐந்துமுறை அத்துமீறலாக ஏவுகணை சோதனைகளை இந்நாடு நடத்தியுள்ளது. இந்த ஆண்டில் கடந்த பெப்ரவரி மாதம் முதன் முதலாக ஒரு ஏவுகணையை செலுத்தியது.

இந்நிலையில், நேற்று காலை மீண்டும் நான்கு ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்ததாகவும், அடுத்தடுத்து விண்ணை நோக்கி சீறிப்பாய்ந்த இந்த ஏவுகணைகளில் மூன்று ஜப்பான் கடல் என்றழைக்கப்படும் கிழக்கு கடல் பகுதியில் விழுந்ததாகவும் தென் கொரியா நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் ஆயிரம் கிலோமீற்றர் வரை பறக்கும் ஆற்றல் கொண்ட இந்த ஏவுகணை கண்டம் விட்டு பாயும் ரகத்தை சேர்ந்ததாக இருக்க முடியாது என்றும் அந்த செய்திகள் குறிப்பிடுகின்றன. வடகொரியாவின் இந்த அடாவடித்தனத்துக்கு ஜப்பான் கண்டனம் தெரிவித்துள்ளது.

வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே கூட்டு இராணுவ பயிற்சி நடைபெற்றவரும் நிலையில் நேற்று நடத்தப்பட்ட ஏவுகணை பரிசோதனைக்கு தென் கொரியாவும் அமெரிக்காவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பப்புவா நியூ கினியாவில் 6.5 ரிச்டர் நிலநடுக்கம்

பப்புவா நியூ கினியாவின் போகைன்வில்லி பகுதியில் நேற்று 6.5 ரிச்டரளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம்ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனுக்கு சொந்தமான மி.எம்.ஜி. தீவின் தென்பகுதியிலுள்ள 'லயே' என்ற இடத்தில் நேற்று ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் விளைவாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை என்றும் அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தீவு நாடான பப்புவா நியூ கினியாவில் கடந்த 1998ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் அடுத்தடுத்து உண்டான 7 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தின் விளைவாக மூன்றுமுறை சுனாமி ஏற்பட்டு, சுமார் 2100 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் உணவில் உப்பு குறைவா?

உணவில் குறைந்த அளவு உப்பு சேர்த்தால் மாரடைப்பு ஏற்படும் அபாயமுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 5 கிராம் உப்பை உணவில் பயன்படுத்தினால் உடல் நலம் மேம்படும் என உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் இந்த அளவு போதாது.

உணவில் இன்னும் கூடுதலாக உப்பு சேர்த்துக்கொள்ள வேண்டும் என கனடாவிலுள்ள மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் சலீம்யூசுப் தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு 3 கிராம் சோடியம் உடலில் கலக்க வேண்டும். அதற்கு குறைந்தால் மாரடைப்பு ஏற்பட்டு இதயத்தின் செயற்பாடுகள் நின்று உயிரிழக்கும் அபாயம் ஏற்படும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நாளொன்றுக்கு 7.5 முதல் 12.5 கிராம் உப்பு எடுத்தால் தான் 3 அல்லது 5 கிராம் சோடியம் பெற முடியும். எனவே 5 கிராம் உப்பு போதாது. எனவே கூடுதல் அளவில் உப்பு சேர்க்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அது குறித்து விளக்கங்களை ஐரோப்பிய இதய ஜேர்னல் பத்திரிகையில் அவர் வெளியிட்டுள்ளார். அதே நேரத்தில் அளவுக்கு அதிகமாக உப்பு சேர்த்தால் உடல் நலம் பாதிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஜெ'வுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பில் எய்ம்ஸ் அறிக்கை தாக்கல்

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி தமிழக அரசிடம் எய்ம்ஸ் மருத்துவமனை சார்பில் 5 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா சிகிச்சைக்காக அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது டில்லி எய்ம்ஸ் மருத்துவர்களும் வந்து சிகிச்சையளித்தனர். அவர்கள் அளித்த சிகிச்சைகள் பற்றி தமிழக அரச அறிக்கை கேட்டு இருந்தது.

அதை ஏற்று டில்லி எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் 5 அறிக்கைகளை நேற்று தாக்கல் செய்தனர். தமிழக அரசின் சுகாதாரத்துறை முதன்மை செயலாளர் ராதாகிருஷ்ணை விடம் அந்த அறிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கைகளில், ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முழு விபரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

டில்லி எய்ம்ஸ் மருத்துவமனை துணை இயக்குனர் சீனிவாஸ் இந்த 5 அறிக்கைகளையும் அளித்துள்ளார்.

உலகச் செய்திகள்

60 ஆண்டுகள் சேவையிலிருந்து ஓய்வுபெறும் விமானம் தாங்கி 'வீராட்'

இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் 60 ஆண்டுகளாக சேவையாற்றிய ஐ.என்.எஸ். வீராட் கப்பல் நேற்று கடற்படை பணியிலிருந்து ஓய்வு பெறுகிறது.

இந்திய கடற்படையில் ஐ.என்.எஸ். வீராட் மற்றும் ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா எனும் இரு விமானம் தாங்கி போர்க்கப்பல்கள் உள்ளன. இதில் ஐ.என்.எஸ். வீராட், இந்தியாவின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் எனும் பெருமையைப் பெற்றதாகும்.

இங்கிலாந்தில் 1959ஆம் ஆண்டு கட்டப்பட்டு அந்நாட்டு கடற்படையில் பயன்படுத்தப்பட்ட இந்த கப்பல், உலகின் மிகச் சிறந்த விமானம் தாங்கி கப்பல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 23 ஆயிரத்து 900 டொன் எடை கொண்ட இந்த கப்பல் 226.5 மீற்றர் நீளமும், 49 மீற்றர் அகலமும் கொண்டது. இந்த விமானத்தில் இருந்து ஒரே நேரத்தில் 18 விமானங்கள் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

1986ஆம் ஆண்டு இந்த விமானம் தாங்கி போர்க் கப்பலை இங்கிலாந்திடம் இருந்து இந்தியா வாங்கியது. 1987ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கடந்த 27 ஆண்டுகளாக இந்த கப்பல் இந்திய கடற்படையின் பெரும்பலமாக இருந்தது. குறிப்பாக தெற்காசிய பிராந்தியத்தில் மிகவும் வலுவான சக்தி வாய்ந்த விமானம் தாங்கிப் போர்க் கப்பலாக வீராட் திகழ்ந்தது.

இலங்கைக்கு இந்திய அமைதிப்படை வந்த போதும், இந்தியாவை சுனாமி பேரலைகள் தாக்கிய போதும், இந்திய பாராளுமன்றம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய போதும் வீராட் கப்பல் செய்த சேவை பொற்றுதலுக்குரியதாக இருந்தது. இத்தகைய சிறப்புடைய ஐ.என்.எஸ். வீராட் நேற்று (திங்கட்கிழமை) கடற்படை பணியிலிருந்து ஓய்வு பெறுகிறது.

இதற்கான விழா நேற்று மும்பை கடற்படை தளத்தில் நடத்தது. இதில் வீராட் கப்பலின் கமாண்டர்களாக பணிபுரிந்த 22 பேரில் 21 பேர் பங்கேற்றனர். அவர்கள் உணர்ச்சி பொங்க வீராட் போர்க்கப்பலுக்கு விடை கொடுத்தனர்.

பிரிவுபசார விழாவுக்கு பிறகு வீராட் போர்க்கப்பல் குஜராத் மாநிலத்தில் உள்ள அலங் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்படும். அங்கு அந்த கப்பலை 4 மாதம் நிறுத்தி வைப்பார்கள். இந்த 4 மாதத்துக்குள் வீராட் கப்பலை யாரும் வாங்கா விட்டால் அதை துண்டு துண்டாக உடைத்து விட முடிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே ஆந்திர மாநில அரசு வீராட் கப்பலை வாங்கி விசாகப்பட்டினத்தில் நிறுத்தி மியூசியமாக மாற்றும் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டத்தை செயற்படுத்த ரூ.1000 கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்திலும், இந்தியாவிலும் 60 ஆண்டுகளாக சேவையாற்றிய வீராட் கப்பல் உடைபடுவதில் இருந்து தப்புமா என்பது இன்னும் 4 மாதங்களில் தெரிந்து விடும்.

ஐ.எஸ்ஸின் தாக்குதல் உக்கிரமடைந்துள்ள மொசுலிலிருந்து குழந்தைகளுடன் வெளியேறும் குடும்பமொன்றை ஈராக் தேசிய படைவீரரொருவர்....

ஜெர்மன் அதிகாரிகள் நாஜி முறைகளை கடைப்பிடிக்கின்றனர்

துருக்கி ஜனாதிபதியின் குற்றச்சாட்டிற்கு எதிர்ப்பு

ஜெர்மன் அதிகாரிகள் நாஜி நடைமுறைகளை கடைப்பிடிப்பதாக, துருக்கி ஜனாதிபதி அர்துகான் முன்வைத்த குற்றச்சாட்டை ஜெர்மன் அரசியல்வாதிகள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

அர்துகானின் அந்த குற்றச்சாட்டை தொடர்ந்து, ஜெர்மனியிலுள்ள துருக்கி வாக்காளர்களுக்கு மத்தியில் துருக்கி அரசியலமைப்பில் மாற்றத்தை கொண்டு வருவதற்கான ஆதரவு திரட்டும் பிரசார பேரணிகள், பல நகரங்களில் ரத்து செய்யப்பட்டன.

''அர்துகான் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள வழி தெரியாமல் அடம்பிடிக்கும் குழந்தை போல்'' நடந்து கொள்வதாக ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கலின் கிறிஸ்தவ ஜனநாயக யூனியனின் துணை தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியிலுள்ள சுமார் 1.5 மில்லியன் துருக்கியர்கள் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் வாக்களிக்க தகுதியுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

டிரம்பின் அடுத்த அதிரடி:

ரஷ்யாவுடன் ஒபாமா இரகசிய தொடர்பு

ஒபாமாவுக்கு ரஷ்யாவுடன் இரகசிய தொடர்பு இருந்ததாக கூறி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டிரம்ப் தேர்வு செய்யப்பட்ட போதே, ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. ஹிலாரியை தோற்கடிக்க இணையத்தளம் வழியாக ரஷ்யா முயற்சிகள் மேற்கொண்டதாக அமெரிக்க உளவுத் துறை தகவல் தந்தது. இதுதொடர்பாக விசாரிக்கப்படும் என அப்போதைய ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார். ஆனாலும், புதிய ஜனாதிபதி டிரம்ப், ரஷ்யாவுடன் நட்புடன் இருந்து வந்தார்.

இந்நிலையில், ஒபாமா நிர்வாகம் மீது டிரம்ப் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கூற ஆரம்பித்துள்ளார். நேற்றுமுன்தினம் டிரம்ப் தனது டுவிட்டர் பதிவில், எனது வெற்றிக்கு முன், என்னுடைய அலுவலக தொலைபேசி அழைப்புகளை ஒபாமா ஒட்டு கேட்டுள்ளார். அதில் எதுவும் அவருக்கு கிடைக்கவில்லை என எந்த ஆதாரத்தையும் வெளியிடாமல் குற்றம் சாட்டினார். இதற்கு ஒபாமா தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே டிரம்ப், தனது டுவிட்டர் பதிவில், தேர்தலுக்கு பிறகு உங்களுக்கு இன்னும் அதிகளவில் ஒத்துழைப்பேன் என விளாடிமிரிடம் கூறுங்கள் என இரகசியமாக கூறியது யார்? என கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், கடந்த 2012ஆம் ஆண்டு ஒபாமா 2ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பாக, அவர் ஹொட்லைன் மூலம் அப்போதைய ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவிடம் பேசியிருப்பதையும் டிரம்ப் கட்டிக்காட்டியுள்ளார்.

படுகொலை விவகாரம்:

மலேசியாவிலிருந்து வெளியேறினார் வட கொரிய தூதர் காங் சோல்

கோலாலம்பூரிலிருக்கும் தூதரகத்தை விட்டு மலேசியாவுக்கான வட கொரிய தூதர் வெளியேறியுள்ளார்.

வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன்னை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்த அவரது ஒன்று விட்ட மூத்த சகோதரர் கிம் ஜோங் நாமின் கொலையை புலனாய்வு செய்ததில் எழுந்த சர்ச்சையில், தூதர் கொங் சோல் 48 மணிநேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கடந்த சனிக்கிழமை மலேசிய அரசு உத்தரவிட்டது.

இக் கொலைக் குற்றப் புலனாய்வை சூழ்ச்சியோடு கையாள முயன்றதாக வட கொரியா மீது மலேசிய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தடை செய்யப்பட்ட நஞ்சை இரண்டு பெண்கள் முகத்தில் தடவியதால், கிம் ஜோங் நாம் கொல்லப்பட்டதாக கட்டிக்காட்டியிருக்கும் பிரேத பரிசோதனை முடிவுகளை வட கொரியா நிராகரித்திருக்கிறது.

ஏறாவூர் கிரிக்கெட் போட்டியில் அக்கா உக்கா அணி சம்பியன்

ஏறாவூர் பிரிவிலுள்ள விளையாட்டுக்க முகங்களுக்கான 2017 ஆம் ஆண்டுக் கான அணிக்கு அறுவர்கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக் கெட்போட்டியில் இம்முறை சம்பியன் கிண்ணத்தை அக்கா உக்கா விளை யாட்டுக்கழகம் வெற்றி கொண்டது.

ஏறாவூர் பக்தாத் கிரிக்கெட் மைதா னத்தில் இடம்பெற்ற இறுதிப் போட் டியில் ஜின்தா பாத் மற்றும் அக்கா உக்கா அணிகள் களம் கண்டன.

நாணயச்சுழற்சியில் வென்ற ஜின்தா பாத் அணி முதலில் துடுப்படுத்தாட களமிறங்கியது.

இதனடிப்படையில் முதலில் துடுப் படுத்தாடிய ஜின்தா பாத் அணி நிர்ண யிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 30 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது,

ஜின்தா பாத் அணி சார்பில் மொஹ மட் பர்சான் 20 ஓட்டங்களைப் பெற் றுக்கொண்டார்,

பந்து வீச்சில் அக்கா உக்கா அணி சார்பில்மொஹமட் ஆசிக் 3 விக்கெட் டுக்களை கைப்பற்றினார்.

31 ஓட்டங்கள் என்றவெற்றியிலக்கை நோக்கி துடுப்படுத்தாடிய அக்கா உக்கா அணி 3 ஓவர்களில் 2 விக்கெட்டுக் களை மாத்திரம் இழந்து வெற்றியி லக்கை கடந்தது.

அக்கா உக்கா அணி சார்பில் மொஹமட் மூசி ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் பௌசானி 10 ஓட்டங்களையும் பெற்று அணிக்கு வெற்றியை தேடித் தந்தனர்,

போட்டியின் நாயகனாக மொஹட் ஆசிக் தெரிவானதுடன் தொடரின் நாய கனாக கே .ஆர். பௌசான் தெரிவா னமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுடனான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு தொடர்பிலான ஒப்பந்தமா னது நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழ மையுடன் நிறைவுக்கு வந்தது.

இந்நிலையில், இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் பொதுச் செயலாளரான டில்வின் சில்வா, இலங்கை அரசானது மீண்டும் இந்த ஒப் பந்தத்தை புதுப்பித்துக்கொள்ளக் கூடாது என்று கூறியிருந்தார்.

அதாவது, 2007 களில் நாட்டில் யுத்தம் இடம்பெற்றமையால் அமெரிக்காவின் உதவி எமக்குத் தேவைப்பட்டாலும் இப் போது அந்த நிலைமை மாற்றமடைந்து விட்டது. ஆனால், அமெரிக்காவுக்கு அப் படியல்ல. அது இந்தியா, சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் தொடர்ந்தும் முறுகல் நிலைமையையே பேணி வரு கின்றது.

இவ்வாறு இருக்கும்போது இந்த ஒப்பந் தத்தை இலங்கை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளுமாயின் அது தேவையில்லாத பலப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். எனவே, அரசு இத்திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையிலேயே அமெரிக்காவுட னான இந்த ஒப்பந்தத்தை மீண்டும் அரசு புதுப்பித்துக்கொள்ளவுள்ளது என்று தெரி யவந்துள்ளது. இது குறித்து இன்று பிற்ப கல் பாதுகாப்பு அமைச்சினால் உத்தியோ கபூர்வமாக அறிவிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாபர் மசூதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய் யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்த விசாரணை நீ திமன்றம், இவர்கள்தான் பாபர் மசூதியை இடிக்க சதி திட்டம் தீட்டினர் என்பதற் கான ஆதாரம் இல்லை என கூறி 2001ல் அத்வானி உள்ளிட்டோரை, விடுதலை செய்தது. மேல்முறையீட்டின்போது, அலகாபாத் றைகோர்ட்டும் 2010ல் அந்த தீர்ப்பை உறுதி செய்தது.

இந்த தீர்ப்பு வெளியான 9 மாதங்கள் கழித்து, சி.பி.ஐ தரப்பில் உச்சநீதிமன்றத் தில் அத்வானி உள்ளிட்டோருக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டை விசாரிக்க கூடாது என்றும், தங்களை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் அத்வானி உள்ளிட்ட, இவ்வழக்கில் தொடர்புடைய பாஜக தலைவர்கள் கோரிக்கைவிடுத்த னர்.

சிபிஐ தாமதமாக மேல்முறையீடு செய்ததால் அந்த அடிப்படையில் தங் களை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பது இவர்களது கோரிக் கையாக இருந்தது. ஆனால், இதுபோன்ற டெக்னிக்கல் அடிப்படையில் விடுதலை செய்ய முடியாது என கப்ரீம் கோர்ட் கூறி விட்டது. இதையடுத்து அத்வானி உள் ளிட்டோர் விசாரணையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக் கது.

சிபிஐ தாமதமாக மேல்முறையீடு செய்ததால் அந்த அடிப்படையில் தங் களை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பது இவர்களது கோரிக் கையாக இருந்தது. ஆனால், இதுபோன்ற டெக்னிக்கல் அடிப்படையில் விடுதலை செய்ய முடியாது என கப்ரீம் கோர்ட் கூறி விட்டது. இதையடுத்து அத்வானி உள் ளிட்டோர் விசாரணையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக் கது.

ஹம்பாந்தோட்டை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒப்பந்தத்தை செய்யவுள்ளமையின் பின்னணியில் பாரிய மோசடித் திட்ட மொன்று இருக்கின்றது என்றும் இதனை விடேட ஆணைக்குழுவின் ஊடாக ஜனாதிபதி கண்டறிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினர்.

கோட்டையில் அமைந்துள்ள தமது கட்சித் தலைமையகத்தில் நேற்று காலை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறி னார். இதுவிடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

தங்க முட்டையிடும் வாத்தை விற்ற கதையாக அம்பாந்தோட்டைத் துறைமு கத்தை விற்கும் நடவடிக்கையில் அரசு தற்போது மும்முரம் காட்டி வருகின் றது. இதுதொடர்பில் சீனாவுடன் செய் துக்கொள்ளவுள்ள 74 பக்கங்களைக் கொண்ட உடன்படிக்கையானது தற்போது எமக்கு கிடைத்துள்ளது.

இதில், துறைமுகக் கட்டுமானப் பணிகளுக்குச் செலவான 80 வீதமான பணத்தை மட்டுமே சீனா இலங்கைக்கு வழங்கும். ஏனையபடி துறைமுகம் அமைந்துள்ள 180 ஏக்கர் நிலப்பரப்பு, அதனூடன் அண்டிய 55 ஏக்கர் அளவி லான குட்டித் தீவு, இவைத் தவிந்த 100 ஏக்கர் காணி, இவற்றுக்கு மேலதிகமாக 780 ஏக்கர் நிலப்பரப்பு என சகலதும் இலங்கையால் சீனாவுக்கு இலவசமா கவே வழங்கப்பட வுள்ளது.

மேலும், இந்த உடன்படிக்கையி லுள்ள 43 இன் கீழ் 1 எனும் சரத்தில், 99 வருடத்துக்குப் பின்னர் இலங்கை யானது மீண்டும் இத்துறைமுகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, அக்காலத்து சந்தைத் தொகையை செலுத்தியே பெற் றுக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பி டப்பட்டுள்ளது. அதாவது, இலவசமாக சகலதையும் வழங்கிவிட்டு 99 வருடங் களுக்குப் பின்னர் எமது சொத்தை நாம் காக கொடுத்து பெற்றுக் கொள்ள வேண் டுமாம்.

99 வருடங்களுக்குப் பின்னர் இந்த துறைமுகத்தின் பெறுமதி ரில்லியன் கணக்கில் உயர்ந்திருந்தும். அப்படியா னால் இதனை இலங்கையால் எக்காரணம் கொண்டும் மீண்டும் வாங்கவே முடியாது என்பதால் தான் சீனா இவ்வாறான ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளது.

அத்தோடு, சீனாவுக்கு வழங்கப்பட வுள்ள 1080 எக்டயார் மொத்த நிலப்பரப் பில் 500 எக்டயார் நிலப்பரப்புக்கான வருடாந்தக் குத்தகைத் தொகையானது 494 மில்லியன் ரூபா எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு தேசிய நிறுவன மான லாப் கேஸ் நிறுவனத்துக்கு 12 எக் டயார் நிலப்பரப்பை வழங்கியபோது 5 ஆயிரம் மில்லியன் வருடாந்தக் குத்தகை யாகக் பெறப்பட்டது. இப்படி உள்நாட்டு நிறுவனங்களிடம் அதிக தொகைக்கு நிலங்களை விற்றுவிட்டு, தற்போது உல கிலேயே செல்வந்த நாடான சீனாவுக்கு மிகவும் குறைந்த குத்தகைத் தொகையை அரசு அறவிடவுள்ளது. சரியாயின் சீனாவி டமிருந்து வருடாந்தக் குத்தகைத் தொகை யாக அரச 15 ஆயிரம் மில்லியனை அறவிட்டிருக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, இந்த குத்தகைத் தொகையானது வருடா வருடம் 100 இற்கு 3 எனும் வீதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் இந்த உடன்படிக்கையில் இல்லை.

இவ்வாறான பல்வேறுத் தவறுகளால் இலங்கைக்கு அடுத்துவரும் 99 வருடங் களுக்கு 1436 மில்லியன் அதாவது, 1.4 ரில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படவுள்ளது. ஆனால், இது அரசியலுடன் குறிப்பிட்டத் தரப்பினருக்கு நிச்சயமாக தெரிந்திருந்தும் அவர்கள் இதுவிடயத்தில் ஏதும் நடவ டிக்கை எடுக்காதிருப்பதன் பின்னணியில் பாரிய மோசடித் திட்டமொன்று உள்ளது என்பதே தெளிவாகத் தெரிகின்றது.

எவரோ ஒருவர் தன்னுடைய பைகளை நிரப்பிக் கொள்வதற்காகவே அம்பாந் தோட்டைத் துறைமுகத்தை விற்பனை செய்ய மும்முரம் காட்டி வருகிறார். என வே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவிடயம் தொடர்பில் உடனடியாக ஆணைக்குழு மூலம் விசாரணைகளை மேற்கொண்டு இந்த மோசடி உடன்படிக் கையை கைவிட வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

புருனை சென்றார் மன்னர் சல்மான்

சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத் புருனை நாட்டுக்கு விஜயம் செய்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

அந்நாட்டின் முடிக்குரிய இளவரசர் சுல்தான் ஹாசானல் போல்கி மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளினால் மன்னர் சல்மான் வரவேற்கப்பட்டுள்ளதா கவும் கூறப்படுகின்றது.

வரவேற்பையடுத்து சுல்தானின் உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தை நோக்கி மன் னர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மன்னர் சல்மான் ஆசிய நாடுகளுக்கான விஜயத்தின் ஒரு அங்கமாகவே புரு னைக்கு சென்றுள்ளதாகவும், எதிர்வரும் நாட்களில் ஜப்பான், சீனா மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளுக்கும் விஜ யம் செய்யவுள்ளதாகவும் வெளிநாட்டு தகவல்கள் தெரிவித்துள்ளன.

தம்புள்ளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி தம் புள்ளை நகரில் முஸ்லிம் ஒருவருக்குரிய சிற்றுண்டிச்சாலை ஒன்றில் பேகப்பன் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையைடுத்து சுமார் 25 காடையர்களின் வேண்டு கோளின் பேரில் நகரிலுள்ள முஸ்லிம்க ளுக்குரிய வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டதோடு சில வர்த்தக நிலையங்களில் கப்பமும் எடுக்கப்பட்டிருந்தன. இரு கடைகளுக்கு தீவைக்கப்பட்டிருந் தன. மூன்று நாட்கள் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸில் பொலிஸ் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறது.

இதன்படியே பொலிஸ் ஆணைக்குழு இந்த முறைப்பாடு தொடர்பாக விசா ரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிப ரைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்தோனேசியா அரசின் சார்பாக அந்நாட்டின் பொதுப் பணிகள் மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் Basuki Hadimuljono மற்றும் விசேட தூதுக்குழு வினர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் பேண்தகு மற்றும் சமநிலையான அபிவி ருத்தியை நோக்கமாகக்கொண்டு நடை பெறும் இந்து சமுத்திர பிராந்தியத்தின் அரச தலைவர்கள் உச்சி மாநாடு நாளை (07) ஜகார்த்தாவில் ஆரம்பமாகிறது.

ஜனாதிபதி மைத்திபால சிறிசேன மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்ள உள்ளதுடன், இலங்கை நேரப்படி நாளை முற்பகல் 11.00 மணிக்கு மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

இதே நேரம் இந்தோனேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோனேசியாவில் வாழும் இலங்கையர்களுடனான சந்திப் பில் ஜனாதிபதி இன்று பிற்பகல் கலந்து கொள்ளவுள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர, இராஜாங்க அமைச்சர் வீ.எஸ். இராதாகிருஷ்ணன், பிரதி அமைச்சர்களான கஜீவ சேனசிங்க, திலீப் வெதஆரச்சி உள்ளிட்டோர் ஜனா திபதியுடன் இப்பயணத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

இலங்கையர்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குவைத்தில் பணிபுரியும் இலங்கையர் கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச் சினைகள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றை நிதி அமைச்சர் ரவிகருணாநாயக் கவுக்கும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரலவுக்கும் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் கபிர் ஹாசிம் நவமணிக்கு தெரிவித்தார்.

குவைத்தில் கமார் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் இலங்கையர்கள் பணிபுரிகி றார்கள். இவர்களில் 50000 பேர் பணிப் பெண்களாவர்கள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இவர்களுக்கு பிரச்சி னைகள் குறைவாக இருக்கின்றது. அநேக பணிப்பெண்கள் 10,15 வருடங்களாக த்தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலைகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதாவது, நாட்டின் மொத்த கடன் தொகை 9500 கோடி அமெரிக்க டொலர் களைத் தாண்டிவிட்டமையால் அரசானது பாரிய நிதிநெருக்கடிக்கு தற்போது முகம் கொடுத்து வருகின்றது. இதனால், தாம் உள்ளிட்ட ஏனைய சர்வதேச வங்கிகளி டமிருந்து கடன் பெற்றுக் கொள்வதைக் குறைத்துக்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு தற்போது வலி யுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக தற்போது இடம் பெற்றுவரும் கொழும்பு- கண்டி அதி வேக நெடுஞ்சாலையுடன் இணைத்து மேற்கொள்ளப்படவிருந்த கண்டி- தம்புள்ளை அதிவேக வீதி, கொழும்பு- இரத்தினபுரி அதிவேக வீதி ஆகியற்றின் பணிகளே அரசினால் கைவிடப்பட் டள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைப்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பணிபுரிந்து வந்த நிலையில் அவரது மாத சம்பளம் சேமித்து வைக்கப்படுகிற தாகஇ அவரது எஜமானியால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் நான்கு வருடங்கள் முடியவேஇ தான் இலங்கை திரும்ப வேண்டுமெனக்கூறி தனது சம்பள பணத்தை கேட்கவேஇ அவரை அடித்து மிரட்டியதாக முறைப்பாடொன்றை முன்வைத்து, குறித்தப் பெண் இலங்கை துதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்தை தொடர்ந்து இலங்கை தூதரகம் மற்றும் அந்நாட்டு பொதுத்துறை மற்றும் வதிவிட விவ கார தலைவர் தலால் மாஅபாயியுடன் இணைந்து கொடுத்த முறைப்பாட்டை அடுத்து, குறிந்த எஜமானிஎியிடம் அந் நாட்டு அதிகாரிகள் பேசிய நிலையில், இலங்கை பணிப்பெண்ணிற்கு இலங்கை பெறுமதிப்படி 16 இலட்சத்தை கொடுப் பதற்கு குறிந்த ஜமானி சம்மதித்துள்ள தாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

கொழும்பு..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள குப்பைகளை மீத்தொட்டமுல்லையில் கொட்டுவதற்கு எதிராக நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தலைமை யில் போராட்டமொன்று நடைபெற்றது.

காலை முதல் மதியம்வரை இடம் பெற்ற இப்போராட்டத்தில் பௌத்த பிக்குகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு தத்தமது எதிர்ப்புக்களை வெளியிட்டனர்.

கொலன்னாவை குப்பை மலையை அகற்றக்கோரி கடந்த 10 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் எதிர்ப்புக்க ளின் ஒரு அங்கமாக நேற்றைய தினம் இடம்பெற்ற இந்தப் போராட்டம் தொடர் பில் நவமணிக்கு கருத்து வெளியிட்ட மரிக்கார் எம்.பி.,

கொழும்புக் குப்பைகளை கொலன்னா வையில் கொட்ட வேண்டாம் என்று நாம் பலதடவைகள் வலியுறுத்திவிட்டோம். இதுவிடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நடவடிக்கை எடுக்கப் பணித்தும் இன்னும் இதனை செய்துக்கொள்ள முடியாதுள்ளது வேத னையளிக்கின்றது. இந்தக் காரணத்தினால் தான் நாம் போராட்டத்தில் குதித்துள் ளோம்.

கொழும்புக் குப்பைகளை கொழும் புக்கு வெளியில் கொட்டுமாறு மத்திய சுற்றாடல் திணைக்களத்தால் இடம் வழங் கப்பட்டுள்ளபோதிலும் அந்நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படாமலேயே இருக்கின்றது. இது மக்களுக்கு எதிரான செயற்பாடாகும்.

நாம் எமது போராட்டத்தை தற்காலி கமாகவே நிறுத்தியுள்ளோம். இன்று இதுவிடயம் தொடர்பில் பேச்சு நடத்த மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா எம்மை அழைத்துள்ளார்.

இதன்போது உரிய தீர்வொன்று முன்வைக்கப்படாவிடின் எமதுப் போராட்டத்தை நாம் மேலும் தொடர் வோம் என்றார்.

நேற்று இடம்பெற்ற இப்போராட்டத்தி னால் கொழும்பு- அவிசாவளை பிரதான வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட் டது என்பது குறிப்பிடத்தக்கது.

வடமேல்....

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை யில்லாத பிரேரணைக்கான தீர்மானம் நிறைவேற்றப்படுகின்ற வாக்கெடுப்புக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப் பினர்கள் இருவர் வழங்கும் பலத்தினைக் கொண்டே வெற்றி தோல்வி நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக வடமேல் மாகாண சபை உறுப்பினர் ரிஸ்வி ஜவஹர்ஷா தெரிவித் தார்.

வடமேல் மாகாண ஆளுநர் அமர பியசீலி ரத்நாயகவுக்கு எதிராக கடந்த 2 ஆம் திகதி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியினரால் 7 ஆம்சங்களைக் கொண்ட நம்பிக்கையில்லா பிரே ணையை முன்வைத்து மாகாண சபை முதல்வரிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்த னர். இதற்கான நம்பிக்கையில்லாப் பிரே ணைக்கான தீர்மானம் நிறைவேற்றும் வாக்கெடுப்பு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரி விக்கையில்,

13 வது யாப்பு அரசியலமைப்பின் படி சரத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை முறையற்ற விதத்தில் ஆளுநர் பயன்படுத் துகின்றார் எனவும் அவருக்கு உரித்தான அதிகாரங்களுக்கு அப்பால் தன்னிச்சையா கச் செயற்படுகின்றார் எனவும் குற்றச் சாட்டை முன்வைத்து இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மான நிறைவேற்றப்பட வுள்ளது. 51 உறுப்பினர்களைக் கொண்ட வடமேல் மாகாண சபையில் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது ஆளும் தரப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 36 பேர் உறுப்பினர்கள் இருக்கின்றனர். எதிர்கட்சி க்கு 14உறுப்பினர்கள் உள்ளனர். ஆளும் தரப்பில் உள்ளவர்களில் இருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந் தவர்கள். இந்த 36 பேரில் ஒருவரான பியூமால் ஹேரத் வாக்களிப்பில் இருந்து விலகியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தால் மட்டும் தான் ஆளும்தரப்பினருடைய நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வெற்றிபெற முடியும். எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியிலுள்ள அனைத்து 36 உறுப்பி னர்களும் வாக்களித்தல் வேண்டும். எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களின் குழுவின் தலைவர் என்ற வகையில் இரு தரப்பினரும் எம் மோடு பேச்வார்த்தையில் ஈடுபட்டுள்ளார் கள். இதில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவரும் உள்ளனர். தற் போது எதிர்க்கிக்கு 14 உறுப்பினர்கள் உள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநித் துவப்படுத்தும் எதிர்கட்சித் தலைவரான கமல் சேனரத் குழுவுக்கு முஸ்லிம் காங் கிரஸ் கட்சி உறுப்பினர் இருவரின் வாக்கு கள் கிடைக்கும் பட்சத்தில் 17 வாக்குகள் எதிர்தரப்புக்கு கிடைக்குமாயின் ஆளும் தரப்பினர் முன் வைத்துள்ள நம்பிக்கை யில்லாத் தீர்மானம் தோல்வி அடையும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப் பினர்கள் எந்தப் பக்கம் ஆதரவளிக்கின் றார்களோ அந்தப் பக்கம் வெற்றிபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Sports
விளையாட்டுச் செய்திகள்

மே.தீவுகள் - பாக். தொடரில் கூடுதல் போட்டிகள் சேர்ப்பு

மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டி20 தொடரில் மேலதிகமாக இரு போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளதாக மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே 2 போட்டிகளைக் கொண்டதாக இட்டமிடப்பட்டிருந்த டி20 தொடரில் மேலும் இரு போட்டிகள் சேர்க்கப்பட்ட நிலையில், நான்கு போட்டிகளை கொண்ட தொடராக இது அமையவுள்ளது.அதன்படி மார்ச் 31ஆம் திகதி ஆரம்பிக்கவிட்டமிடப்பட்டிருந்த தொடர், 26ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. முதல் போட்டி 26 ஆம் திகதியும், 2ஆவது போட்டி 30ஆம் திகதியும், 3ஆவது போட்டி 31ஆம் திகதியும், 4ஆவதும் இறுதியுமான போட்டி ஏப்ரல் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளது. இதன்படி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற இரு நாடுகள் பங்கேற்கும் 2ஆவது 4 போட்டிகளைக் கொண்ட தொடராக இது அமையவுள்ளது.இதற்குமுன் கடந்த வருடம் சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் 4 போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் விளையாடியிருந்தது.

ஐயசூரியவின் சகலதுறை ஆட்டம் தொடரை வென்றது இலங்கை

இலங்கை ஏ மற்றும் இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இலங்கை ஏ அணி 4 விக்கட்டுகளால் வெற்றிபெற்று, 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என தொடரைக் கைப்பற்றியது.

குருநாகல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து லயன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ஜெனிங்ஸ் மற்றும் பென் டக்கட் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை மேற்கொண்டிருந்தனர். எனினும், சகலதுறை வீரர் ஷெஹான் ஜயசூரியவின் பந்துவீச்சில் ஜெனிங்ஸ் ஆட்டமிழந்ததையடுத்து இங்கிலாந்து அணி தடுமாறத் தொடங்கியது.தொடர்ந்து ஜயசூரியவின் பந்துவீச்சில் சிக்கிய அவ்வணியின் வீரர்கள் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து 40.2 ஓவர்களில் 184 ஓட்டங்களுக்கு சுருண்டது. இங்கிலாந்து அணி சார்பில் இளம் வீரர் பில் ட்ரம்மொஹட் 51 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஷெஹான் ஜயசூரிய 35 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களையும், ஜெப்ரி வெண்டர்சே 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 185 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 37 ஓவர்களில் 6 விக்கட்டுகளை இழந்து 187 ஓட்டங்களை பெற்று வெற்றிபெற்றது.இப்போட்டியில் கடந்த 2 போட்டிகளிலும் அபாரமாக விளையாடியிருந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலகவுக்கு ஓய்வளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும், இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் குறைந்தளவு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட ஷெஹான் ஜயசூரிய 83 ஓட்டங்களை விளாசி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.பந்துவீச்சில் ஸரைஸ் மற்றும் லிவிங்ஸ்டோன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.இவ்விரு அணிகளுக்குமிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை அணிக்கு 20 வருடங்களுக்குப் பிறகு பங்களிப்பு செய்ய கிடைத்தமை பெருமையளிக்கிறது

இலங்கை அணியின் முகாமையாளர் அசங்க குருசிங்க

பீஎஸ்எம் நிஷாட் குமார்

20 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இலங்கை அணிக்கு பங்களிப்புச் செய்ய வாய்ப்பு கிடைத்தமையிட்டு பெருமையடைவதாக 1996 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் அசங்க குருசிங்ஹ தெரிவித்தார்.

இலங்கைக்கு 1996 உலகக்கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்தில் 3ஆம் இலக்க வீரராகக் களமிறங்கி அதிரடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி எதிரணியை அதிரவைத்து தனக்கென்ற தனியொரு முத்திரை பதித்த இலங்கை அணியின் முன்னாள் வீரர் அசங்க குருசிங்ஹ 20 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இலங்கை கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காப் பணியாற்றவுள்ளார். இதன்படி ,இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளராக அசங்க குருசின்ஹவை 2019ஆண்டு வரை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நியமித்துள்ளது.இந்நிலையில், தனது பதவியினைப் பெறும்பேற்க நேற்று முன்தினம் காலை நாடு திரும்பிய அசங்க குருசிங்ஹ,கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்துகொண்டார்.இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அணியின் வளர்ச்சிக்காக மீண்டும் சேவையாற்றக்கிடைத்தமை உண்மையில் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், எனது பாடசாலை நண்பருமான அரவிந்த டி சில்வாவுடன் நான் பாடசாலை கிரிக்கெட்டில் அறிமுகமானேன்.அதன்பிறகு இளம் வயதில் தேசிய அணியில் இடம் பிடித்தேன்.உண்மையில் 1996 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் விளையாடி இலங்கை அணி சம்பியனாவதற்கு வழிவகுத்திருந்தமை இன்றைக்கும் என்னை பிரமிக்க வைத்துள்ளது. இலங்கை கிரிக்கெட் என்பது யாருடைய தனிப்பட்ட சொத்து அல்ல. கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு எவரும் முன்வந்து உதவலாம்.எனவே இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால என்னை கடந்த 5 மாதங்களுக்கு முன் அவஸ்திரேலியாவில் சந்தித்தபோது இப்பதவியை ஏற்குமாறு அழைப்புவிடுத்திருந்தார். எனவே இன்று நான் அவருடைய அழைப்பை ஏற்று மீண்டும் இலங்கைக்கு வருகை தந்துள்ளேன். குறிப்பாக முற்றிலும் இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை அணியை சிறப்பான முறையில் கட்டியெழுப்பி 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கான சிறந்த அணியொன்றை உருவாக்குவதே எனது இலக்காகும். தற்போது உள்ளூர் கிரிக்கெட் சிறந்த கட்டமைப்புடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.-அதிலும் குறிப்பாக தேசிய அணியில் கிரறம் போர்ட் தலைமையிலான சிறந்த பயிற்றுவளர்கள் குழாமொன்றும் செயற்பட்டு வருகின்றது. இதன்காரணமாக அண்மையில் தென்னாபிரிக்க மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கெதிரான டி20 தொடர்களை எமது வீரர்கள் சிறப்பாக விளையாடி முழு உலகிற்கும் தமது திறமையினை வெளிப்படுத்தியிருந்தனர்.உண்மையில் அந்தப் போட்டியை பார்த்தபோது எனக்கு மிகப் பெரிய சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது.எனவே இந்தப் பதவியை வழங்கிய இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கும், அதன் தலைவர் திலங்க சுமதிபாலவுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால,கிரிக்கெட் நிறுவனத்தின் ஆலோசகர் அரவிந்த டி சில்வா, தெரிவுக்குழுவின் தலைவர் சனத் ஜயசூரியா, இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மினுவாங்கொடை - கல்லொழுவை, லூத்தா சர்வதேச அங்கிலக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள், கல்லூரி மைதானத்தில், அதிபர் எம். அப்பான் தலைமையில் இடம்பெற்றது. மினா (சிவப்பு) இல்லம் 950 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை சுவீகரித்துக் கொண்டதுடன், மதீனா (பச்சை) இல்லம் 845 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கும், மக்கா (நீலம்) இல்லம் 720 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்திற்கும் தெரிவாகின. கல்லூரியின் பணிப்பாளர் பெரோஸ் ரஹீம் , அதிபர் எம். அப்பான் , முன்னாள் அதிபர் இனோகா ஜோசப், கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.எச்.எம். காமில், கல்லொழுவை ஐ.தே.க. அமைப்பாளர் அப்துல் கப்பார் ஹாஜி உள்ளிட்ட பிரமுகர்கள் பலரினால், வெற்றி பீட்டிய இல்லங்களுக்கும், வீரர்களுக்கும் ஞாபகச் சின்னங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ. ஏ. காதிர் கான்)

பாக். சுப்பர் லீக் டி20 தொடர்:

குவாட்டா அணியை வீழ்த்தி மகுடம் சூடியது பெஷவர் அணி

கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தான் மண்ணில் வெளிநாட்டு வீரர்களின் பங்குபற்றலுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியின் 2ஆவது அத்தியாயத்தை குவாட்டா கிலெடியேட்டர்ஸ் அணியை வீழ்த்தி பெஷாவர் சல்மி அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

இந்த போட்டியில் பெஷாவர் சல்மி அணியை எதிர்த்தாடிய குவாட்டா கிலெடியேட்டர்ஸ் அணி 58 ஓட்டங்களால் படுதோல்வியடைந்து. பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் லீக் போட்டிகள் கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி முதல் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் மற்றும் சார்ஜாவில் இடம்பெற்ற நிலையில், இறுதிப் போட்டி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாகிஸ்தானின் லாஹூர் நகரில் உள்ள கடாபி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியின் மத்தியஸ்தராக இலங்கையின் ரொஷான் மஹநாம கடமையாற்ற, நடுவராக ரென்மோ மார்டினஸ் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்க்கது. இந்நிலையில் இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெஷாவர் சல்மி அணி 148 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக கம்ரான் அக்மல் 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குவாட்டா கிலெடியேட்டர்ஸ் 16.3 ஓவர்களில் 90 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

இதேவேளை, போட்டியின் நாயகனாக டெரன் சமி தெரிவாக, தொடரின் நாயகனாகவும், தொடரின் சிறந்த விக்கெட்காப்பாளராகவும் கம்ரான் அக்மால் தெரிவானதுடன்,அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய சொஹைல்கான் சிறந்த பந்துவீச்சாளராகவும் தெரிவானார்.

ஜோ றூட், வோக்ஸ் அபாரம் தொடரை வென்றது இங்கிலாந்து

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் ஜோ றூட், கிறிஸ் வோக்ஸ் இணைப்பாட்டம் கைகொடுக்க இங்கிலாந்து அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, தொடரை கைப்பற்றியது.

மேற்கிந்திய தீவுகள் சென்றுள்ள இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இங்கிலாந்து வென்றது. இரண்டாவது போட்டி ஆன்டிகுவாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி, 47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களை பெற்றது.தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணி, 48.2 ஓவர்களில் 226 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணியின் ஜோரூட் 90 ஓட்டங்களையும், வோக்ஸ் 68 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்கு பலம் சேர்த்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை - பங்களாதேஷ் கிரிக்கெட் தொடர்:

இளம் வீரர்களுடன் களமிறங்கும் முதல் டெஸ்ட் இன்று காலியில் ஆரம்பம்

பீஎஸ்எம் நிஷாட்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்குமிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி இன்று காலியில் ஆரம்பமாகவுள்ளது.இதன்படி, எதிர்வரும் 15 ஆம் திகதி பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ள 2ஆவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷ் அணி பங்குபற்றும் 100 ஆவது டெஸ்ட் போட்டி என்பது சிறப்பம்சமாகும்.எனினும், இவ்விரு அணிகளுக்குமிடையில் இதுவரை 16 டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்றுள்ளதுடன், இதில் 14 போட்டிகளில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளதுடன், 2 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்தன. எனவே இலங்கை அணிக்கெதிராக தமது முதல் டெஸ்ட் வெற்றியைப் பதிவு செய்யும் நோக்கில் பங்களாதேஷ் அணி இன்று களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இலங்கை அணியின் தலைவர் மெத்யூஸ் உபாதைக்குள்ளாகியுள்ள நிலையில், அணியில் உள்ள அனுபவமிக்க வீரரான 38 வயதுடைய ரங்கன ஹேரத் தலைவராக செயற்படவுள்ளார். அத்துடன், ஹேரத்தைப் போன்று பந்துவீசுகின்ற இடதுகை சுழற்பந்துவீச்சாளரான 29 வயதான மலிந்த புஷ்பகுமாரவுக்கு டெஸ்ட் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அதேநேரம், தென்னாபிரிக்க மற்றும் அவுஸ்திரேலிய தொடர்களில் திறமைகளைப் வெளிப்படுத்திய நிரோஷன் திக்வெல்ல மற்றும் அசேல குணரத்ன ஆகியோருக்கும் டெஸ்ட் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக திமுத் கருணாரத்ன மற்றும் உபுல் தரங்க களமிறங்கவுள்ள அதேநேரம்,3ஆம் இலக்கத்தில் குசல் மெண்டிஸ் களமிறங்கவுள்ளதுடன் 7ஆம் இலக்க வீரராக அசேல குணரத்ன விளையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாக காலி ஆடுகளத்தில் 2 வேகப்பந்துவீச்சாளர்களுடன் மாத்திரம் இலங்கை அணி களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த வருடம் சொந்த மண்ணில் பிரபல அவுஸ்திரேலிய அணியை வெள்ளையடிப்பு செய்த இலங்கை அணி, பெரும் எதிர்பார்ப்புடன் இன்றைய போட்டியிலும் களமிறங்கவுள்ளது.பங்களாதேஷ் அணியைப் பொறுத்தமட்டில் அனுபவமிக்க பல இளம் வீரர்களுடன் இன்றைய போட்டியில் களமிறங்கவுள்ளது. அணித்தலைவராக முஷ்பிகுர் ரஹிம் செயற்படவுள்ள நிலையில், சகிப் அல் ஹசன், தமீம் இக்பால் மற்றும் மஹ்முதுல்லா ஆகிய சீரேஷ்ட வீரர்கள் இருப்பது அவ்வணிக்கு அதிக நம்பிக்கையை கொடுத்துள்ளது.அத்துடன் அண்மைக்காலமாக பந்து வீச்சில் அசத்தி வருகின்ற முஷ்தபிகுர் ரஹிமான் உபாதைக்குப் பின்னர் அணியில் இடம் பெற்றிருப்பது பங்களாதேஷ் அணிக்கு பலமாக அமைந்துள்ளது. இந்நிலையில், கடந்த 2 வருடங்களாக இலங்கை அணியின் முன்னாள் வீரரும் பயிற்சியாளருமான சந்திக்க ஹத்துருசிங்கவின் பயிற்சியின் கீழ் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேற்றம் கண்டுள்ள அவ்வணி,இலங்கை மண்ணிலும் சாதிப்பார்கள் என கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கின் மாபெரும் சமராக இடம்பெறவுள்ள ஸ்பீட் டி20 கிரிக்கெட் வெற்றிக் கிண்ணம்-2017 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (05) சாய்ந்தமருது வொலிவேரியன் மைதானத்தில் ஆரம்பமானது.சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக்கழக பொதுச்செயலாளர் அலியார் பைஸரின் ஏற்பாட்டிலும், அதன் தலைவர் ஏ.ஆதம்பாவா தலைமையிலும் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வு சுற்றுப்போட்டிக்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டார்.ஆரம்ப நிகழ்வில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரின் ஆலோசகரும், ஓய்வுபெற்ற மாவட்ட விளையாட்டு அதிகாரியுமான எம்.ஏ.நபார், பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர்களான நௌபர் ஏ. பாவா, ஜ.எல்.ஹமீட் உள்ளிட்ட விளையாட்டு ஆர்வலர்கள், விளையாட்டு ரசிகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.இதன்போது ஸ்பீட் டி20 கிரிக்கெட் வெற்றிக் கிண்ண போட்டிக்கான சம்பியன் கிண்ணத்தை பிரதி அமைச்சர் ஹரீஸ் உத்தியோகபூர்வமாக போட்டி ஏற்பாட்டாளர்களிடம் கையளித்தார்.(றியாத் ஏ. மஜீத்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 07TH MARCH 2017